www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2006
ரூ. 5.00



கயர்லாஞ்சி:
சாதிவெறியர்களின் வக்கிரம்-கொடூரம்!



மும்பை-நவம்பர் 12 அதிகாலை:
நடைபாதையில் உறங்கிய ஏழு பேரை, ஒரு மேட்டுக்குடிப் பொறுக்கி குடிவெறியில் காரை ஏற்றிக் கொன்ற துயரம் தாளாமல் கதறும் உறவினர்கள்.



ஐந்திலக்கச் சம்பளம்,
சொகுசுக் கார்,
சனிக்கிழமை களியாட்டம்...
தாராளமயம் பெற்றெடுத்த

# நாகரீக பொறுக்கிகளால் விளையும் விபரீதங்கள்!

படிப்பகம்

www.padippakam.com

## ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., ஏ.ஐ.ஐ.எம்.எஸ்.

# உயர்கல்வி நிறுவனங்களா? பார்ப்பன அக்ரகாரமா?

இந்தியத் தொழில்நுட்பக் கழகம், இந்திய மேலாண்மைக் கழகம், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் உள்ளிட்ட அதிஉயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பார்ப்பன-மேல் சாதி வெறியர்களின் கூடாரமாக இருப்பதை, இடஒதுக்கீடுக்கு எதிராக அக்கல்லூரிகளில் நடத்த போராட்டங்கள் அம்பலப்படுத்தின. இடஒதுக்கீடு என்ற பிரச்சினையில் மட்டும்தான் அக்கல்லூரி களில் படிக்கும் மேல்சாதி மாணவர்களும், ஆசிரியர்களும் சாதிப் பற்றோடு நடந்து கொண்டார்கள் என்பதில்லை. இக்கல்லூரிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களை - அவர்களில் வசதி படைத்தோரையும் (creamy layer) கூட - மேல் சாதி மாணவர்களும், ஆசிரியர்களும் அன்றாடம் சாதிரீதியாக இழிவுபடுத்துவதும், துன்புறுத்துவதும் எவ்விதத் தடையோ, தயக்கமோ, தண்டிக்கப்படுவோம் என்ற அச்சமோ இன்றி நடந்து வருகிறது. மிகவும் நுணுக்கமாகவும், நுண்ணிய வடிவத்திலும் இக்கல்லூரிகளில் கடைபிடிக்கப்படும் தீண்டாமை, கிராமப்புறங்களில் நடைபெறும் தீண்டாமைத் தாக்குதல்களுக்கு எவ்விதத்திலும் குறைந்ததில்லை.

● அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் இளங்கலை மருத்துவம் (எம்.பி.பி.எஸ்) படிக்கும் உமாகாந்த் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். உமாகாந்த் அக்கல்லூரியின் விடுதி எண்: 1-இல் தங்கிப் படித்து வந்தார். ஒருநாள் அவரின் அறைக் கதவில் ஒரு நோட்டீசு ஒட்டப்பட்டிருந்தது. அதில் அவரைச் சாதிரீதியாக இழிவாகத் திட்டியும், கிண்டலும் செய்யப்பட்டிருந்ததோடு, அவர் உடனடியாக அந்த அறையைக் காலி செய்துவிட்டு ஓடிவிட வேண்டும் என எச்சரிக்கப்பட்டிருந்தது. அந்த அறையில் தொடர்ந்து தங்கினால், மன உளைச்சல் ஏற்பட்டு படிப்பே பாழாகிவிடும் எனப் புரிந்து கொண்ட உமாகாந்த், அந்த அறையைக் காலி செய்துவிட்டு விடுதி எண்: 4-க்கு மாறிவிட்டார்.

மற்றொரு தாழ்த்தப்பட்ட மாணவர் வகுப்புக்குச் செல்வதைத் தடுப்பதற்காக, அவரது அறைக் கதவை வெளியே பூட்டி விட்டுச் சென்றுள்ளனர், மேல் சாதி திமிர் பிடித்த மாணவர்கள். இந்தத் தீண்டாமைத் தொல்லையில் இருந்து தப்பிக்க, அவரும் தனது அறையை மாற்றிக் கொண்டு சென்று விட்டார்.

● தில்லியில் உள்ள மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகக் கல்லூரியின் விடுதி உணவகத்தில் மேல்சாதி மாணவர்களுக்குத் தனியாகவும், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின மாணவர்களுக்குத் தனியாகவும் உணவு பரிமாறும் தீண்டாமை வெளிப்படையாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருவதை ''டைம்ஸ் ஆப் இந்தியா'' என்ற நாளிதழ் அம்பலப்படுத்தி எழுதியிருக்கிறது.

இச்சாதிப் பிரிவினையைப் பற்றி அறியாத விக்ரம்ராம் என்ற தாழ்த்தப்பட்ட மாணவர், அக்கல்லூரியில் சேர்ந்த புதிதில், விடுதி உணவகத்தில் மேல்சாதி மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் உணவு உண்ண அமர்ந்திருக்கிறார். உடனடியாக விக்ரம்ராமைச் சூழ்ந்து கொண்ட மேல்சாதி மாணவர்கள், ''எங்களோடு உட்கார்ந்து சாப்பிட உனக்கெல்லாம் என்ன தகுதி இருக்கிறது போக்கிரிப் பயலே'' என அவரை இழிவுபடுத்தித் துரத்தியடித்து விட்டனர். அக்கல்லூரியின் விடுதியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உணவருந்தும் பகுதியில் ''இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது'' என மீண்டும் மீண்டும் எழுதி வைத்து அவமானப்படுத்தியுள்ளனர்.

அக்கல்லூரியில் படிக்கச் சேர்ந்த ராகேஷ் குமார் என்ற தாழ்த்தப்பட்ட மாணவருக்கு, மேல்சாதி மாணவர்களோடு தங்குவதற்கு அறை ஒதுக்கீடு செய்யப்பட்டபொழுது, ''கக்கூஸ் கழுவுகிறவனெல்லாம் எங்களோடு தங்கக் கூடாது'' என அவர் அவமானப்படுத்தப்பட்டு, வேறு அறைக்குத் துரத்தப்பட்டுள்ளார்.

● தில்லியைச் சேர்ந்த ''முன் அறிதல் மற்றும் ஆராய்ச்சி மையம்'' என்ற அரசுசாரா தன்னார்வ அமைப்பு, இந்திய மேலாண்மைக் கல்லூரிகளில் படிக்கும் / படித்து முடித்து வெளியே வரும் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் நிலை பற்றி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆராய்ந்து அளித்துள்ள அறிக்கையில், ''இக்கல்லூரி நிர்வாகங்கள், தங்கள் கல்லூரிகளில் முதலாளித்துவ நிறுவனங்கள் நடத்தும் வளாகத் தேர்வின் பொழுது, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த நிர்வாக மேலாண்மைப் பட்டதாரிகளை வேண்டுமென்றே, சாதிப் பாகுபாட்டோடு, குறைவான ஊதியம் தரப்படும் வேலைகளுக்கே அனுப்புவதாகக் குற்றஞ் சுமத்தியுள்ளது. மேலும், ''பொதுத்துறை நிறுவனங்கள்தான் தாழ்த்தப்பட்ட மாணவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களோ, பார்ப்பனியக் கண்ணோட்டத்தின்படி, அவர்களைப் பெரும்பாலும் புறக்கணித்துவிடும் தீண்டாமையைக் கடைப் பிடிக்கின்றன'' என அம்பலப்படுத்தியிருக்கிறது.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

இட ஒதுக்கீட்டுக்கு எதிராக ஆதிக்க சாதியைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் தில்லியில் நடத்திய போராட்டம்.






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 22**

**இதழ் 2**

டிச. 2006

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

தொலைபேசி: 94446 32561


# முல்லைப் பெரியாறு: சிக்கலும் தீர்வும்

**கா**விரி ஆற்று நீர் சிக்கலைப் போல முல்லைப் பெரியாறு அணை சிக்கலில் நிறைய வாதப் பிரதிவாதங்களுக்கு அவசியமில்லை. உண்மை விவரங்களே தமிழகத்தின் நியாய உரிமைகளையும் கேரள அரசின் அடாவடித்தனங்களையும் நிலைநாட்டுவதாக உள்ளன. இன்றைய கேரள மாநிலத்தின் ஒரு பகுதியான திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் 999 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் செய்து கொண்டு, அன்றைய ஆங்கிலேய காலனிய அரசு முல்லைப் பெரியாறு அணையை 1895-இல் கட்டி முடித்தது. திருவிதாங்கூர் மன்னருடனான ஒப்பந்தத்தின்படி பெரியாறு அணையின் 482 சதுர மைல் பரப்பளவு பகுதி மீது தமிழகத்திற்கு முழு உரிமை உள்ளது. அணையைப் பராமரிப்பது, பாதுகாப்பது, நிர்வகிப்பது ஆகிய உரிமைகள் தமிழகத்திற்கே உண்டு. இந்த வகையில் முல்லைப் பெரியாறு அணை முழுக்கவும் தமிழகத்திற்கே உடைமையானது என்று அவ்வொப்பந்தம் தெட்டத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. 1942-ஆம் ஆண்டு பெரியாறு அணையில் மின் உற்பத்தி செய்வது என்று சென்னை மாநில அரசு முடிவு செய்து, பெரியாறு அணையைப் பலப்படுத்தவும், நீர்வளத் துறை தலைவர் சான்றிதழுடன் 152 அடி வரை நீரைத் தேக்கி வைக்கும் உரிமையையும் பெற்றது. இதற்கான ஒரு ஒப்பந்தத்தையும் கேரள அரசுடன் போட்டுக் கொண்டது.

1976-இல் மின்னுற்பத்தியை மட்டுமே நோக்கமாகக் கொண்ட சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு விளைவிக்கும் 555 அடி உயர இடுக்கி அணையை கேரள அரசு கட்டியது. அதன்பிறகுதான் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையாக்கப்பட்டது. 1979-இல் முல்லைப் பெரியாறு அணையில் நீர்க்கசிவு இருப்பதாக மலையாள மனோரமா ஏடும், இன்றைய சி.பி.எம். முதல்வர் அச்சுதானந்தனும் முன்னின்று ஒரு புரளியைக் கிளப்பி விட்டனர். இந்தப் புரளியின் அடிப்படையில் அணையில் நீர் தேக்குவது 136 அடியாகக் குறைக்கப்பட்டு, தமிழகத்தின் தென்மாவட்டங்களில் 38,000 ஏக்கர் விளைநிலங்கள் தரிசாக்கப்பட்டன. தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வந்த வறட்சி நிலை காரணமாக மீண்டும் முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி நீர்தேக்கிக் கொள்வதற்கான உரிமையைப் பெற உச்சநீதி மன்றத்தை தமிழக அரசு நாடியபோது, அது, இதற்கான தீர்வு காணும்படி மத்திய அரசிடம் பரிந்துரைத்தது. அப்போதிருந்து பேச்சுவார்த்தை என்கிற பெயரில் இழுத்தடிப்பு வேலையைத்தான் கேரள அரசு மேற்கொண்டு வருகிறது. நடுநிலையான ஆய்வாளர்களின் முடிவின்படி முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும் உரிமையை கடந்த மார்ச் மாதம் உச்சநீதி மன்றம் வழங்கியது. ஆனாலும் அந்த அணை உடைந்துவிடும் ஆபத்தில் இருப்பதாக கேரள மக்களிடையே பீதியைக் கிளப்பி உச்சநீதி மன்றத் தீர்ப்பை அமலாக்க விடாமல் கேரள ஓட்டுக் கட்சிகள் தொடர்ந்து முயன்று வருகின்றன. பழைய ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் அணையின் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவுமான ஒரு தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றினார்கள். மத்திய இராணுவ மந்திரியாக உள்ள கேரளத்தைச் சேர்ந்த அந்தோணியின் முயற்சியால் கட்டப்படையை வைத்து புதிய ஆய்வுக்கு முயன்றது.

தமிழக அரசு மீண்டும் உச்சநீதி மன்றத்தை அணுகியபோது, பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக் கொள்ளும்படி அது பரிந்துரைத்தது. தமிழகத்தின் நியாயத்தை அங்கீகரித்து உரிமை வழங்குவதற்குப் பதில், பேச்சு வார்த்தை, தேசிய ஒருமைப்பாடு என்றெல்லாம் பார்ப்பன-பனியா இந்தியத் தேசியவாதிகள் கூப்பாடு போடுகிறார்கள். நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்கள் - இனங்களுக்கிடையிலான எல்லைப் பிரச்சினையாகட்டும், ஆற்றுநீர் பகிர்வுப் பிரச்சினையாகட்டும் குறுகிய அரசியல் ஆதாயத்தை முன்வைத்து, இனவெறியைக் கிளப்பி அடாவடி செய்கின்றன, சில மாநில ஓட்டுக் கட்சிகள். ஆனால், அச்சிக்கல்களில் உள்ள நியாய அநியாயங்களைப் பரிசீலித்து உரிமைகளை வழங்குவதற்குப் பதில் பேச்சுவார்த்தை மூலம் சமரசம் காணும்படி உச்சநீதி மன்றமும், சம்மந்தப்பட்ட மாநிலங்களிடையே சந்தர்ப்பவாத தட்டிக் கழிப்பு வேலைகளை மத்திய அரசும் மேற்கொள்கின்றன. பாதிக்கப்பட்ட இனமக்கள் நியாய உரிமைக்காகப் போராடும் போது, பிரிவினைவாத முத்திரைக் குத்தி ஒடுக்கப்படுகின்றனர். வெறும் ஆற்றுநீர் பிரச்சினை என்பதாக அல்லாமல், ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை இருந்தால்தான் இதுபோன்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஆயுதமாக பாதிக்கப்பட்ட இன மக்கள் பயன்படுத்த முடியும். அதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதில் சந்தர்ப்பவாதம் பேசி ஓட்டுக் கட்சிகள் ஏய்க்கின்றன. தேசிய இனவாதிகளும் வலுவான மக்கள் இயக்கங்களைச் சுயமாகக் கட்டி வளர்ப்பதற்குப் பதில் ஓட்டுக் கட்சிகளின் நிழலில் நின்று கூப்பாடு போடுகின்றனர்.

www.padippakam.com

## தாராளமயம் பெற்றெடுத்த

# நாகரீக பொறுக்கிகளால் விளையும் விபரீதங்கள்!

அவர்கள் அனைவரும் சாலைப் பணியாளர்கள். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகாவிலிருந்து சொந்த மண்ணையும், வீடு-வாசலையும் விட்டு பிழைப்புத் தேடி மராட்டியத்தின் மும்பைப் பெருநகருக்கு விரட்டப்பட்டவர்கள். மும்பை நகரின் செல்வச் சீமான்களின் சொகுசுக் கார்கள் வழுக்கிச் செல்லும் நெடுஞ்சாலைகள் அமைப்பதுதான் அவர்களின் வேலை. ஆனால், அந்தச் சாலையிலேயே, அத்தகை சொகுசுக் கார்களில் ஒன்றாலேயே தாம் நசுக்கிக் கொல்லப்படுவோம் என்று கொஞ்சமும் எண்ணிப் பார்த்திருக்க மாட்டார்கள்!

முன்னிரவில் கொதிக்கும் தாரோடு கலந்த கருங்கல் "ஜல்லி"களோடு கை-கால் வெந்து நெக்குறுகிப் போயிருந்தார்கள். அதன்பிறகு வாட்டி எடுக்கும் கடுங்குளிரில், வெட்டவெளியில் அதே சாலையோரத்தில் அடித்துப் போட்ட மனிதர்களாய் துவண்டு கிடந்தார்கள். அது மும்பை பெருநகரின் பாந்த்ரா பகுதி; கார்ட்டர் சாலை. அதிகாலை 3.45 மணி. பேய்கள்தாம் களிவெறியாட்டம் முடித்து உறங்கப் போகும் நேரம். திடீரென்று பாய்ந்து வந்த "டொயோட்டோ கோரல்லா" என்ற சொகுசுக்கார் அவர்கள் மீது ஏறி ஓடியது. ஐந்து வயதுச் சிறுவன், ஏழு வயதுச் சிறுமி, மூன்று பெண்கள், இரண்டு ஆண்களை நசுக்கிக் கொன்றது. மேலும் பதினான்கு பேரை சாவின் விளிம்பிற்குத் தள்ளியது.

காரை ஓட்டியவர் உட்பட காரிலிருந்த ஆறு பேரும் 18 முதல் 21 வயதேயாகியவர்கள், எல்லோரும் குடிபோதையில் மிதந்தார்கள். போதை இறங்கி விட்டால் மேலும் ஏற்றிக் கொள்ள சீமைச் சாராயப் புட்டிகளும் காரில் கிடந்தன. அவர்கள் அனைவரும் மும்பையில் செல்வச் சீமான் வீட்டுக் குலக் கொழுந்துகள். பெற்றோர்களின் தொழில் நிர்வாகிகள் அல்லது மேட்டுக்குடிக் கல்லூரி மாணவர்கள்.

இந்தக் கொலைகாரர்கள் எல்லாம், மும்பையின் முதன்மையான நட்சத்திர விடுதியான தாஜ் ஓட்டலில், வயிறு முட்டக் குடித்தும், தின்றும், ஆட்டம் பாட்டம் என்று கும்மாளமிட்டு விட்டுத் திரும்பியிருக்கிறார்கள். இவர்கள் குடித்துக் கூத்தடித்துக் கொண்டிருந்த அந்த நள்ளிரவிலும், இந்தத் தொழிலாளர்கள் சாலை போட்டுக் கொண்டிருந்தார்கள். அதிகாலை இரண்டு மணிக்குத்தான் பணி முடித்துக் களைப்பாறத் தூங்கப் போனார்கள். இந்தக் கோரமான முடிவைச் சந்தித்தார்கள். இந்தக் களிவெறித் தாக்குதலில் இருந்து தப்பிப் பிழைத்த அவர்களின் உறவினர்கள் மொழி அறியாத அந்த இடத்தில் கதறி அழும் காட்சி நெஞ்சை அறுக்கும் துயரம்மிக்கதாகவே இருந்தது.

அந்த ஏழை-எளிய உழைப்பாளிகளின் உயிர்கள் அற்பமாக மதித்துப் பறிக்கப்பட்டதைப் போலவே, கொலைகாரர்களுக்கான தண்டனையும் அற்பமாகவே இருக்கப் போகிறது. மும்பை-பாந்த்ரா சாலைத் தொழிலாளர்களுக்கெதிரான இந்தக் கோரமான கொலைக்குற்றம், குடித்துவிட்டு மோட்டார் வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்குரிய அலட்சியத்தால் இழைக்கப்படும் குற்றமாகக் கருதித் தண்டிக்கும் குற்றப்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, இந்தியத் தண்டனைச் சட்டம் 304(A) அலட்சியம் காரணமாக மரணம் விளைவிக்கும் குற்றம் - இதன்படி குற்றவாளி பிணையில் வந்துவிடமுடியும்; அதிகபட்சம் தண்டனை இரண்டு ஆண்டு சிறையும், அபராதமும் விதிக்கப்படும்.

ஆனால், நடந்திருப்பது ஒரு கொலைக்குற்றம். தாழ்த்தப்பட்ட மக்களை சாதிவெறியர்கள் படுகொலை செய்வதற்கு சாதி ஆதிக்கவெறி அடிப்படையாக இருப்பதைப் போல, ஏழை - எளிய மக்களைக் கிள்ளுக்கீரையாக எண்ணி மிகவும் அலட்சியமாகப் பலியிடுவதற்கு அடிப்படையாக, செல்வமிகு மேட்டுக்குடித் திமிர்த்தனம் இருக்கிறது. ஆண்டைகள் தமது செல்லப்பிராணிகளுக்கு அடிமைகளை இரையாக்கி, அதைக் கண்டு மகிழ்வதைப் போன்ற வக்கிரம் இந்த மேட்டுக்குடித் திமிர்த்தனத்தில் வெளிப்படுகிறது.

இதுவொன்றும் வழக்கம் போல குடித்துவிட்டு மோட்டார் வாகனங்களை ஓட்டும் அலட்சியம் அல்ல; தனி ஒரு சம்பவமும் அல்ல. மும்பை மட்டுமல்ல, பிற பெருநகரங்களிலும் இத்தகைய கிரிமினல் குற்றங்களில் மேட்டுக்குடி-செல்வச்சீமான்களின் குலக் கொழுந்துகள் ஈடுபடுவது ஒரு பொதுப் போக்காகவே இப்போது வளர்ந்து வருகிறது. இந்த ஆண்டு துவக்கத்தில் ஸ்டாண்டார்டு வங்கியின் உயர் அதிகாரி நீல் சட்டர்ஜி மும்பையின் பிரபாதேவி பகுதியில் ரமாகாந்த் தூரி என்ற காவலாளியை கார் ஏற்றிக் கொன்றார். இதே பாந்த்ரா பகுதியில் இந்தி நடிகர் ராஜ்குமாரின் மகன் புரு ராஜ் குமார் நடைபாதை மக்கள் மீது கார் ஏற்றிப் பலரைப் படுகாயமுறச் செய்துவிட்டு, வெறும் அபராதத்தோடு தப்பித்துக் கொண்டார்.

இந்தியக் கடற்படை தலைமைத் தளபதி எஸ்.எம். நந்தாவின் பேரனும், கடற்படை தளபதி சுரேஷ் நந்தாவின் மகனும் கிரௌன் கார்ப்பரேசன் கம்பெனியின் ஆயுதங்கள் விற்பனைத் தலைமை அதிகாரியுமான சஞ்சீவ் நந்தா, தனது பி.எம்.டபிள்யூ என்ற சொகுசுக்காரை ஏற்றி ஆறு பேரைக் கொன்றுவிட்டு, தண்டனையின்றித் தப்பித்துக் கொண்டார். கடந்த ஆண்டு, பிரபல கட்டாவ் துணி ஆலை முதலாளி மகேந்திரா கட்டாவின் மகன் மணிஷ் கட்டாவ் மும்பையின் பிரதான சாலையான மரைன் டிரைவில் நின்றிருந்த ஜிதேந்திரா ரோகடே என்ற போலீசுக்காரரை காரேற்றிக் கொன்றுவிட்டு, தண்டனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

மும்பை சிவசேனாத் தலைவர் பால் தாக்கரேயின் உதவியாளர் ரவீந்திர மகத்ரே காரேற்றி இரண்டு பேரைக் கொன்று இரண்டு பேரைப் படுகாயமுறச் செய்தார். பிரபல இந்தி நடிகர் சல்மான்கான், தனது டயோட்டா சொகுசுக் காரை தலைத்தெறிக்க ஓட்டி சென்று ரொட்டிக் கடையின் முன்பு உறங்கிக் கொண்டிருந்த ஒருவரைக் கொன்றும்



படிப்பகம்

www.padippakam.com

நான்கு பேரைப் படுகாயமுறவும் செய்தார்.

இத்தகைய குற்றங்கள் தொடர்வதற்குக் காரணமென்ன? எப்படிப்பட்டவர்கள் இத்தகைய குற்றங்களைச் செய்கின்றனர். தங்குதடையற்ற கொண்டாட்டமும் ப்ரபரப்பான வாழ்க்கையும் இலக்காகக் கொண்டவர்கள்; கத்தை கத்தையாக பணக் கட்டுகளும், கடன் அட்டைகளும், மின்னணுக் கைச் சாதனங்களும், பேய்த்தனமாகப் பாய்ந்து செல்லும் விலையுயர்ந்த மோட்டார் வாகனங்களுமாகப் பெருநகர சாலைகளிலும், நட்சத்திர நடன விடுதிகளிலும் திரிபவர்கள்; தான்தோன்றித்தனமான கேளிக்கைகளிலும் கனவுகளிலும் மிதப்பவர்கள்; சுருக்கமாகச் சொன்னால், தாராளமயம்-உலகமயம் பெற்றெடுத்த செல்வச் சீமான்களின் கொழுப்பேறிய செல்லப் பிள்ளைகள்; அதாவது, நவநாகரீகப் பொறுக்கிகள்.

இந்த "இளைஞர்கள் போதிய பணம் வைத்திருக்கிறார்கள்; அந்தப் பணபலமே தமது அதிகார உரிமை என்று அவர்கள் கருதுகிறார்கள். வெறித்தனம், அதிகாரம், போதை மற்றும் கிறுக்குத்தனமான ஆணவம் - திமிர்த்தனம் ஆகியவை ஒரு கொடிய உயிர்க் கொல்லி ஆயுதமாக அமையும் உலகமயமாக்கம் கூட இம்மாதிரியான நடத்தைகளுக்கு ஒரு காரணமாக அமைகிறது" என்கிறார் மும்பையின் பிரபலமான மனநல மருத்துவர் ஹரீஷ் ஷெட்டி.

இத்தகைய நச்சுப் பண்பாடு, மும்பை மட்டுமல்ல, தில்லி, சென்னை, பெங்களூர், ஐதராபாத் என்று நாட்டின் பெருநகரங்களிலெல்லாம் தொற்று நோயாகப் பரவி வருகிறது. சென்னை - மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையின் இருபுறமும் புற்றீசல்களாய் புறப்பட்டுள்ள சொகுசு மாளிகைகளில் சனிக்கிழமை பின்னிரவு வரை குடித்துக் கும்மாளமிட்டு, கூத்தடித்துவிட்டு பாய்ந்து செல்லும் கார்களை ஓட்டி வரும் மேட்டுக்குடி புதுநாகரிகப் பொறுக்கிகளால் ஏற்படும் "விபத்துகள்" அங்கே வாழும் மக்களைப் பீதியடைச் செய்து வருகின்றன. இந்தச் சாலையில் நடக்கும் சாவுகள் மட்டும், சென்னையின் பிற பகுதிகளில் நடப்பவைகளைவிட அதிகமென்று விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்குக் காரணமானவர்கள் வழக்கமாக நாம் காணும் பரம்பரை பணக்கார வீட்டுச் செல்லப் பிள்ளைகள் அல்ல. கடந்த 15 ஆண்டுகளாக அடுத்தடுத்துவந்த ஆட்சியாளர்கள் பின்பற்றிய தாராளமயம் - தனியார்மயம் - உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாகப் பெய்த டாலர் மழையில் நனைந்த புதுப்பணக்காரர்கள். குறிப்பாக கணினி - தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களில் அதன் உண்மை மதிப்புக்குமேல் பன்மடங்கு வரும் வருவாயினால் ஊதிப் பெருத்துப்போன செல்வத்தில் மிதிப்பவர்கள்தான் கண்மண் தெரியாமல் தறிகெட்டு ஆட்டம் போடுகிறார்கள்.

சில நாட்களுக்கு முன் குடிவெறியில் காரை ஓட்டிச் சென்ற ஒருவர் சாலைத்தடுப்புக் கம்பிகள் மீது மோதி மாண்டார். அதனால், குடிபோதையில் கார் ஓட்டுபவர்களைப் பிடிப்பதற்காக போலீசார் சோதனைகளில் ஈடுபட்ட போது, நள்ளிரவுக்குப் பின்னரும் குடித்துக் கும்மாளமிட்டுவிட்டு இளம் ஜோடிகள் கார்களில் பறப்பதைக் கண்டனர். இதைத் தொடர்ந்து சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் விதிகளை மீறி நடத்தப்படும் சில "பார்கள்" மற்றும் நடன அரங்குகள் மீது திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. நட்சத்திர விடுதிகளில் நள்ளிரவுக்குப் பிறகும் சீமைச் சாராயம் பரிமாறப்படுவதும், இளம்ஜோடிகள் குடிவெறியில் விளக்குகள் அணைக்கப் பட்டும், மங்கிய ஒளியிலும், வரைமுறைகள் இல்லாமல் ஆபாசமாக நடனமாடுவதும் நடப்பதைக் கண்டார்கள்.





**சாலையில் படுத்துறங்கிய தொழிலாளர்களை குடிபோதையோடு கார் ஓட்டி ஏற்றிக் கொன்ற சஞ்சீவ் நந்தா (மேல்படம்-வலது) மற்றும் இந்தி திரைப்பட நடிகர் சல்மான் கான். (கோப்புப் படம்).**

சோதனையிட வந்த போலீசாரைக் கண்டதும், பலர், ஏற்கெனவே 'புக்' செய்திருந்த தமது அறைகளில் பதுங்கிவிட்டனர். மேலும் பலர் பின்புறவழியாகத் தப்பி ஓடினர். போலீசார் வந்ததும் போதையில் ஆடிக் கொண்டிருந்தவர்களைப் பிடித்து விசாரித்த போது அவர்கள் "நல்ல வேலையில் உள்ளவர்கள்; நல்ல குடும்பப் பின்னணி உள்ளவர்கள்" என்று தெரிந்ததால் அவர்களின் "எதிர்கால நலன்களை கருதி எச்சரித்து அனுப்பப்பட்டனர்" என்கிறார்கள், போலீசார். ஆனால், விதிகளை மீறியும் அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கு மேலும் பார்களையும் நடன அரங்குகளையும் நடத்தியதற்காக விடுதி ஊழியர்கள் 17 பேர் மட்டும் கைது செய்யப்பட்டனர்.

"சென்னையில் தெருவுக்குத் தெரு கம்ப்யூட்டர் நிறுவனங்கள் பெருகி வருகின்றன. இவற்றில் நான்கைந்து ஷிப்டுகளில் வேலை நடக்கிறது. நள்ளிரவில் 'ஷிப்டு' முடிந்து செல்பவர்களைக் கவர்வதற்காகவே ஓட்டல்களில் பார்கள் நள்ளிரவைத் தாண்டியும் திறந்து வைக்கப்படுகின்றன. கம்ப்யூட்டர் நிறுவனங்களுக்கு தங்கள் மகன், மகளை வேலைக்கு அனுப்பும் பெற்றோர், வேலை முடித்து அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வீட்டுக்கு வருகிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும். நள்ளிரவில் வெகுநேரம் குடித்துவிட்டு அதிகாலையில் வீடு திரும்புபவர்கள் வேகமாக கார் ஓட்டிச் செல்கின்றனர். இதனால், நிறைய விபத்துக்கள் நடக்கின்றன என்பதையும் பெற்றோர் உணரவேண்டும்" என்கிறார், ஒரு போலீசு அதிகாரி.

என்னவொரு அக்கறை! என்னவொரு பொறுப்பு! எல்லோரும் "நல்ல வேலையில் இருப்பவர்கள், நல்ல குடும்பப் பின்னணி உள்ளவர்கள்" அல்லவா, அதுதான்! ஆனால், பிடிபட்ட பெண்களோ, "நாங்கள் எவன் கூடப் போனால் இவர்களுக்கென்ன?" என்று கொழுப்புக் கொப்பளிக்கக் கேட்கிறார்கள். தாங்கள் அவ்வளவாகக் குடித்திருக்கவில்லை என்றும் குடிபோதையில் இருந்த 15,16 வயதுப் பெண்களை மட்டும் தப்பிப் போகவிட்டார்கள்; (மைனர் பெண்கள் ஆதலால் வழக்

கும் குற்றமும் கடுமையாகக் கருதப்படும் என்பதால் போலீசின் கரிசனம் நிரம்பி வழிந்திருக்கிறது போலும்!) அடையாள அட்டைகளைக் காட்டியபோதும் காக்க வைத்து பெற்றோரை அழைத்து எச்சரித்துவிட்டுத் தான் வெளியே விட்டார்கள்'' என்று குறைபட்டுக் கொண்டார்கள்.

இரவு நேரங்களில் இப்படிக் குடித்துக் கூத்தடிப்பது ஒன்றும் தவறில்லை; ஒளிவு மறைவானதுமில்லை, கூச்சத்துக்குரியதுமில்லை, தகுந்த அடையாளத்தைக் காட்டி பகிரங்கமாகவே இப்படிச் செய்வதில் தயக்கமில்லை என்று அவற்றில் ஈடுபட்டவர்கள் காட்டிக் கொள்கிறார்கள். இப்படிச் செய்வது தங்கள் உரிமை என்றும் வாதிடுகிறார்கள். அதை மறுக்காத போலீசுக்காரர்களும் நடன அரங்கின் புகையும் சூழலும்தான் நல்லதில்லை என்று கூறி அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றிருக்கிறார்கள்.

போலீசார் மேற்கொண்ட நடவடிக்கை முஷ்டியை மடக்கி மிரட்டுவதாகும் என்று ஐதீகமான ''இந்து'' நாளேடு சித்தரிக்கிறது. பெண்களை ஆயிரம் விளக்கு காவல் நிலையத்துக்குக் கொண்டு போய் ஒருமணிநேரம் காத்திருக்கச் செய்தது பயபீதியூட்டுவதாகும் என்று பொருமுகிறது அந்த நாளேடு. கூடவே, இம்மாதிரியான ஆட்டங்களில் பாடுவதைத் தொழிலாகக் கொண்ட ஒருவரைப் பேட்டி கண்டு, ''இப்படிக் கட்டுப்பெட்டித்தனமாக இருக்கக் கூடாது, மின்னணு இசையை இரசிக்கும் புதிய போக்கை வளர்ப்பதற்காக இன்னும் தாராளமாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று எழுதியது அந்த நாளேடு.

அடுத்தநாளே கூடிய தென்னிந்திய ஓட்டல்கள் - உணவகங்களின் உரிமையாளர் சங்கம், ''அந்நிய விமான சேவைகள், அந்நிய நேரடி முதலீட்டாளர்கள், அந்நிய சுற்றுலாப் பயணிகள் ஆகியவர்களுக்காக அரசு தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும். குடிக்கவும், ஆடவுமான நேரத்தை அதிகரிக்க வேண்டும். தகவல் தொழில் நுட்பம், அது சார்ந்த சேவை நிறுவனங்கள், கணினி-வெளி வேலைகளுக்கான நிறுவனங்கள், கால்சென்டர்கள் போன்றவை பெருகிவரும் சென்னையில் இரவு வாழ்க்கை பற்றித் தெளிவான கொள்கையை அரசு வகுக்க வேண்டும்'' என்று கோரியுள்ளனர்.





வேலையை முடித்துவிட்டு, (தில்லியில்) சாலையில் படுத்துறங்கும் கூலித் தொழிலாளர்கள்;
''விளம்பர மாடல்''களைப் போல காட்சி தரும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள்: எதிரும் புதிருமான இந்தியா.

''இரவு வாழ்க்கை'' என்பது மேலே குறிப்பிடப்பட்ட தொழில்களின் நீட்டிப்பாகவும், புதிய பண்பாடாகவும் அந்நிய, உள்நாட்டுக் கூட்டுப்பங்குத் தொழில் கழகங்களால் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றது என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. தமது பணியாளர்களின் இரவு வாழ்க்கைக்காக இந்தக் கூட்டுப்பங்குத் தொழில் கழகங்கள், தாமே கூடுதல் சம்பளம், சுற்றுப் பயணங்கள் - வசதிகள் மற்றும் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்கின்றன. ''என்.ஐ.ஐ.டி.'' மற்றும் ''விப்ரோ'' ஆகிய இரண்டு கணினி மென்பொருள் நிறுவனங்கள், தங்கள் ஊழியர்கள் சேர்ந்து ''தேதி வைத்து'' உல்லாசமாகக் கழிப்பதற்கு சிறப்புப் படி (டேட்டிங் அலவன்ஸ்) வழங்குகின்றன. இதனால் தனது மண வாழ்க்கை சிதைவதாக ''விப்ரோ'' நிறுவனப் பணியாளர் ஒருவரின் மனைவி வழக்குத் தொடுத்துள்ளார்.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற இந்த மறுகாலனியாக்கம் நமது நாட்டுப் பொருளாதாரத்தை மட்டுமல்ல, நமது நாட்டின் பண்பாட்டையும், குடும்பங்களை மட்டுமல்ல, ஏழை எளிய மக்களின் வாழ்வையும், உயிரையும் பறிக்கும் விபரீதங்களாக உருவெடுத்து வருகிறது என்பதையே இவை காட்டுகின்றன.

● ஆர்.கே.

www.padippakam.com

## நெல்காஸ்ட்:

# கொத்தடிமைத்தனத்திற்கு எதிராகக் கொதித்தெழுந்த தொழிலாளர்கள்

எட்டு மணி நேர வேலைக்குப் பதிலாக, சட்டவிரோதமாக 10 மணி - 12 மணி நேர கட்டாய உழைப்பு; வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சாதனங்கள் எதுவும் தரப்பட மாட்டாது; தொழிற்சாலை சட்டங்கள் பின்பற்றப்பட மாட்டாது.

• கடந்த பத்தாண்டுகளில் இங்கு வேலை செய்து உயிரை இழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 10. படுகாயமுற்று உடல் உறுப்புக்களை இழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையோ ஏராளம்.

• பத்தாண்டுகளாகப் பணியாற்றும் நிரந்தரத் தொழிலாளிக்குக் கூட அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் கிடையாது; தொழிற்கல்வி முடித்து பணியில் சேரும் இளம் தொழிலாளருக்கு கிரேடு முறை கிடையாது. ஈராண்டுகளாகத் தொடர்ந்து வேலை செய்யும் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு சட்டப்படி பணி நிரந்தரம் கிடையாது. இவர்களுக்கே இந்த கதி என்றால், ஒப்பந்தத் தொழிலாளர்களின் நிலை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

• இந்தக் கொத்தடிமைத்தனத்தை எதிர்த்து தொழிலாளர்கள் முணுமுணுத்தால், இருட்டறையில் தொழிலாளிகளை அடைத்து ரௌடிகள் மிருகத்தனமாகத் தாக்குவார்கள். அதையும் மீறி இந்த ரௌடித்தனத்திற்கு எதிராக வாய் திறந்தால், அடுத்த நிமிடமே போலீசு ஓடோடி வந்து பொய் வழக்குப் போட்டு தொழிலாளிகளை வதைக்கும்.

- இவையெல்லாம் ஆந்திரா - கர்நாடகாவில் கொத்தடிமைகளாக செங்கற்சூளைகளிலும் கல்குவாரிகளிலும் தொடரும் கொடூரங்கள் அல்ல. தலைநகர் சென்னையை அடுத்துள்ள, பொன்னேரி அருகே மாதவரத்தில் இயங்கும் "நெல்காஸ்ட்" நிறுவனத்தில் கடந்த பத்தாண்டுகளாக நடந்து வரும் அட்டூழியங்கள்.

டிராக்டர், லாரி போன்ற கனரக வாகனங்களுக்கு கேஸ்டிங் உதிரி உறுப்புகளைத் தயாரிக்கும் இக்கொத்தடிமை நிறுவனத்தில் நிரந்தரத் தொழிலாளர்கள் 220பேரும், தற்காலிகத் தொழிலாளர்கள் 400 பேரும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் 500 பேரும், பெண் தொழிலாளர்கள் 200 பேரும் பணிபுரிகின்றனர். இத்தனை தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்த நிர்வாகம், தொழிலாளர்களை ஒடுக்க இரகசியமாக கூலிப்படையையும் கட்டி வைத்துள்ளது. இக்கூலிப்படைக்கு வழக்குரைஞராக உள்ள இரவிக்குமார் என்ற ரௌடி தலைமை தாங்குகிறான். இவன், இந்நிறுவனத்தின் சட்ட ஆலோசகராகவும், தொழிலாளர்களை கூலிக்கமர்த்தும் ஒப்பந்ததாரராகவும் இருந்து தொழிலாளர்களை அடித்து மிரட்டி அடாவடித்தனம் செய்து வருகின்றான்.

இக்கொடுமைகளைக் கண்டு தொழிலாளர்கள் குமுறிக் கொண்டிருந்த நிலையில், கடந்த 23.5.06 அன்று ஜானகிராமன் என்ற தொழிலாளி, மேலிருந்து கிரேன் அறுந்துவிழுந்து மின்சாரம் பாய்ந்து மண்டை உடைந்து இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து மாண்டு போனார். அவரது உடலை தரதரவென ஆலைக்கு வெளியே போட்டு விட்டு தொடர்ந்து ஆலையை இயக்கிய நிர்வாகத்தின் திமிர்த்தனத்தைக் கண்டு வெகுண்டெழுந்த தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக சாலைமறியல் போராட்டத்தில் இறங்கினர். பிறகு, போலீசு வந்திறங்கி தொழிலாளர்களை விரட்டியடித்துவிட்டு, மாண்டுபோன தொழிலாளி குடும்பத்துக்கு கணிசமான தொகை கொடுக்க கட்டப் பஞ்சாயத்து நடத்தி, இக்கோர கொலையை மூடி மறைத்தது.

இனி நமக்கும் இந்த கதிதான் ஏற்படும் என்பதை உணர்ந்த வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள், பு.ஜ.தொ.மு.வுடன் தொடர்பு கொண்டு தொழிற்சங்கம் கட்டியமைக்கும் முயற்சியில் இறங்கினர். நிர்வாகத்தின் அச்சுறுத்தல், ரௌடிகளின் மிரட்டல்களை மீறி 150-க்கும் மேற்பட்ட நிரந்தரத் தொழிலாளர்களும், பலநூறு தற்காலிக - ஒப்பந்தத் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து சங்கமாகத் திரண்டு முறைப்படி தொழிலாளர் துறையிடம் சங்கத்தைப் பதிவு செய்தனர். அதைத் தொடர்ந்து கடந்த 5.11.06 அன்று ஆலை முன்பு பறை முழக்கம் எதிரொலிக்க, தொழிலாளர்கள் வர்க்க உணர்வோடு முழக்கமிட, பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் சங்கத்தின் கொடியை ஏற்ற, மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமார் சங்கப் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார். சங்கம் தொடங்கப் பட்டதையறிந்து ஆத்திரமடைந்த ரௌடி இரவிக்குமார், தனது அடியாட்களுடன் வந்து உதார் விட்டுப் பார்த்து, கோடிக்கால் பூதமாகிய தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையைக் கண்டு பீதியடைந்து ஓடிவிட்டான். அன்று மாலை பொன்னேரியில் தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு திரண்டு வந்து நடத்திய சங்கத் தொடக்கவிழா பொதுக்கூட்டத்தில், முன்னணியாளர்கள் வாழ்த்துரை வழங்க, ம.க.இ.க. மையக்கலைக் குழுவினர் நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சி வர்க்கப் போராட்டத் தீயை மூண்டெழச் செய்வதாக அமைந்தது.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கோழைத்தனமாக சங்கப் பலகையை உடைத்தெறிந்த ரௌடி இரவிக்குமாரை கைது செய்யக் கோரி சுவரொட்டிப் பிரச்சாரம் செய்த தொழிலாளர்கள், மீண்டும் 15.11.06 அன்று சங்கக் கொடியை நட்டு பெயர்ப் பலகையையும் நிறுவினர். இந்த ரௌடி வழக்குரைஞருக்கு நீதித்துறை மூலமாகவும் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. பு.ஜ.தொ.மு. சங்கத்தின் வர்க்க உணர்வும் போர்க்குணமும் தொழிலாளர்களிடம் ஒற்றுமையையும் புதிய நம்பிக்கையையும் ஆழமாக வேரூன்றியுள்ளது. இது பொன்னேரி வட்டாரமெங்கும் எதிரொலித்து இதர ஆலைத் தொழிலாளர்களும் புரட்சிகர சங்கத்தை நிறுவ முயற்சித்து வருகின்றனர். தொழிலாளி வர்க்கம் தோற்றதாக வரலாறு இல்லை.

மாண்டு போன தொழிலாளி ஜானகிராமன் படத்தைக் கையிலேந்தி அஞ்சலி செலுத்தி, நெல்காஸ்ட் ஆலையில் சங்கக் கொடியேற்றும் விழா.



— நெல்காஸ்ட் புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கம், பொன்னேரி.



படிப்பகம்

www.padippakam.com



# கயர்லாஞ்சி தாழ்த்தப்பட்டோர் படுகொலை:

# சாதிவெறியர்களின் வக்கிரம்–கொடூரம்!

தமது சொந்த நிலத்தைப் பறிக்க முயன்ற ஆதிக்க சாதிவெறியர்களின் அக்கிரமத்தை எதிர்த்துப் போராடிய தாழ்த்தப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு நேர்ந்த கோர முடிவு இது.

அம்பேத்கர் பிறந்த மகர் சாதியைச் சேர்ந்த பைய்யாலால் போட்மாங்கே - சுரேகா தம்பதியினர், கடந்த 16-17 ஆண்டுகளாக மகாராஷ்டிர மாநிலம் நாக்பூர் நகருக்கு அருகில் உள்ள கயர் லாஞ்சி கிராமத்தில் வசித்து வந்தனர். அக்கிராமத்தில் போட்மாங்கே குடும் பத்துக்குச் சொந்தமாக ஐந்து ஏக்கர் நிலம் இருந்தது. இவர்களுக்கு 19 வய தான கல்லூரியில் படித்து வந்த ரோஷன்; 21 வயதான ஓரளவே பார் வைத்திறன் கொண்ட சுதிர் என்ற இரு மகன்களும்; மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்ட 17 வயதான பிரியங்கா என்ற மகளும் இருந்தனர். தமது சொந்த நிலத்தில் இருந்தும்; வெளி வேலைகளுக்குச் செல்வதன் மூலமும் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இந்தக் குடும்பம், ஆதிக்கச் சாதியினரை அண்டியிராமல், ஓரளவு பொருளாதார சுதந்திரத்தோடு, சுயமரி யாதைமிக்க வாழ்க்கையை நடத்தி வந்த னர். போட்மாங்கே குடும்பம் இந்து மதத்தின் சாதி ஆதிக்கத்தில் இருந்து விடுபட, அம்பேத்கர் வழியில் புத்த மதத்தைத் தழுவிய பொழுதிலும் ஆதிக்க சாதிவெறியர்கள் இவர்களைச் சாதி ரீதியில் ஒடுக்கி வைக்கவே முனைந்தனர்.

கயர்லாஞ்சி கிராமத்தில் வசித்து வரும் 125 குடும்பங்களில், மூன்றே மூன்று குடும்பங்கள்தான் தாழ்த்தப் பட்ட சாதியினர். பிற குடும்பங்கள் அனைத்தும் குன்பி, தெலி ஆகிய ஆதிக்க சாதியினைச் சேர்ந்தவை. அந் தக் கிராமத்திலேயே, பைய்யாலாலின் மகன் ரோஷனும், மகள் பிரியங்காவும் தான் அதிகம் படித்தவர்கள். பிரியங்கா பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந் தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பைய் யாலாலின் மனைவி சுரேகா கடுமை யான உழைப்பாளி மட்டுமல்ல, தினந் தோறும் ஆதிக்க சாதியினர் கொடுத்து வந்த தொல்லைகளை எதிர்த்து நிற்கும் மனோதிடமும் உடையவர். பைய்யா லால் குடும்பம் கல்வியறிவோடும், சுய மரியாதையோடும் சொந்தக் காலில் நின்று வாழ்ந்து வருவது ஆதிக்க சாதி வெறியர்களின் கண்களை உறுத்திக் கொண்டே இருந்தது.

பைய்யாலால் குடும்பத்துக்குச் சொந்தமான நிலத்தை அபகரிக்கத் திட் டம் போட்ட ஆதிக்க சாதியினர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கிரா மத்துக்குச் சாலை போட வேண்டும் எனக் கூறி எவ்வித நட்டஈடும் இன்றி பைய்யாலால் நிலத்தில் இருந்து கணிச மான பகுதியை எடுத்துக் கொண்டனர். இப்படியாக கிராம பொதுக் காரியம் என்ற பெயரில், ஐந்து ஏக்கரில் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் நிலம் கொஞ்சம் கொஞ் சமாக பைய்யாலாலிடமிருந்து அபக ரிக்கப்பட்டது. கயர்லாஞ்சி கிராம பஞ் சாயத்துத் தலைவனும், சாதிவெறி பிடித் தவனுமான உபாஸ்ராவ் காந்தேட்தான் இந்த அபகரிப்புக்கு மூளையாக இருந்து வந்தான். எனினும், இதற்கு மேலும் நிலத்தை இழந்துவிடக் கூடாது என்பதில் பைய்யாலால் குடும்பம் உறு தியாக நின்றுவிட்டது.

இது ஒருபுறமிருக்க, கயர்லாஞ்சி கிராமத்திற்கு அருகேயுள்ள துஸாலா கிராமத்தைச் சேர்ந்த சித்தார்த் கஜ்பியே, சுரேகாவுக்குச் சகோதரர் முறை கொண்ட நெருங்கிய உறவினர். மகா ராஷ்டிரா போலீசுத் துறையில் "பட் டீல்" எனும் கௌரவ வேலை பார்த்து வரும் சித்தார்த், சுற்று வட்டார கிராமத் தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சித்தார்த் கொடுக்கும் தைரியத்தில்தான் பைய்ய லால் குடும்பம் தங்களுக்குப் பயப்படு வதில்லை எனக் கருவிக் கொண்டிருந்த ஆதிக்க சாதி வெறியர்கள், அக்காள் - தம்பி உறவு முறை கொண்ட சித்தார்த் - சுரேகா இடையே கள்ள உறவு இருப்ப தாகக் கதை கட்டி விட்டனர்.

இந்நிலையில், சித்தார்த் கஜ்பியே, செப்.3 அன்று கயர்லாஞ்சியைச் சேர்ந்த ஆதிக்க சாதிவெறியர்களால் தாக்கப் பட்டார். இத்தாக்குதல் பற்றி போலீசில் அவர் புகார் கொடுத்தார். அவரைத் தாக்கியவர்களை சுரேகாவும், பிரியங் காவும் அடையாளம் காட்டினர். எனி னும், குற்றவாளிகள் தாக்குதல் நடந்து 26 நாட்கள் கழித்துதான் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். மேலும், அவர் கள் மீது வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடராமல், சாதாரண அடி தடி வழக்கே போடப்பட்டதால், குற்ற


படிப்பகம்

www.padippakam.com

வாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்ட அன்று மாலையே (செப். 29) பிணையில் விடப்பட்டனர்.


பைய்யாலால் போட்மாங்கே

அன்றே, ஆதிக்கசாதி வெறியர்கள் ஒன்றுகூடி, சித்தார்த், அவரது சகோதரர் ராஜேந்திரா, போட்மாங்கே குடும்பத்தினரைப் பழி வாங்கத் திட்டம் போட்டுக் கொண்டனர். அச்சதியின்படி, அன்று மாலை பைய்யாலால் வீட்டிற்கு வந்த சாதி வெறி கும்பல், 'ஒட்டு மொத்த குடும்பத்தையே ஒழித்து விடுவோம்' என எச்சரித்துவிட்டு, சித்தார்த்தையும், அவர் தம்பி ராஜேந்திராவையும் தேடிச் சென்றது. அவர்களைக் கண்டறிய முடியாததால் மேலும் ஆத்திரமாகி மறுபடியும் பைய்யாலாலின் குடிசைக்கு வந்த அந்தக் கும்பல், குடிசையின் கதவைப் பிய்த்து எறிந்தது. பைய்யாலால் அப்போது வீட்டில் இல்லை. இரவு உணவைச் சமைத்துக் கொண்டிருந்த சுரேகாவையும், மகள் பிரியங்காவையும் இரு மகன்களையும் பலவந்தமாக வீட்டிற்கு வெளியே இழுத்துப் போட்டனர். அவர்களின் வீட்டு வாசலிலேயே, சுரேகாவும், பிரியங்காவும் நிர்வாணமாக்கப்பட்டு, கிராமத் திடலுக்கு ஊர்வலமாக, அடித்து இழுத்துச் செல்லப்பட்டனர்.

பைய்யாலால் குடும்பம் தண்டிக்கப்படுவதை வேடிக்கை பார்க்க ஊரில் இருந்த ஆதிக்க சாதியைச் சேர்ந்த அனைவரும் கிராமத் திடலில் கூடி நின்றனர். சைக்கிள் செயின், கோடாரி, மாடு ஓட்டப் பயன்படுத்தப்படும் தார்குச்சி எனக் கையில் கிடைத்த வற்றை எல்லாம் கொண்டு கண்மண் தெரியாமல் தாயும், மகளும் தாக்கப்பட்டனர். அவ்விரு பெண்களையும், ஆதிக்கசாதி பெண்கள் - சிறுவர்கள் முன்பாக ஆதிக்கசாதி ஆண்கள் அனைவருமே வன்புணர்ச்சி செய்து கொன்றனர். இருவரும் பிணமான பின்னரும் வன்புணர்ச்சியில் ஈடுபட்டன அம்மிருகங்கள். பிணங்களின் பிறப்புறுப்புக்களில் மூங்கில் குச்சிகளைச் செருகினர். சுதா எனும் ஒரே பெண்ணைத்தவிர எந்தப் பெண்ணும் இதை எதிர்க்க முன்வரவில்லை. எதிர்த்த அந்தப் பெண்ணும் மிரட்டப்பட்டதால், சம்பவத்தின்போதுதான் அந்த இடத்திலேயே இல்லை என்று சாதித்தார்.

கண் எதிரேயே தன் தாயையும், தங்கையையும் ஆதிக்க சாதிவெறியர்கள் சீரழித்துக் கொண்டிருந்தபோது, சுதிர் தனது செல்போனில் போலீசை அழைக்க முயன்றார். உடனே செல்போனைப் பிடுங்கி நொறுக்கிய கும்பல், சுதிரையும் ரோஷனையும் கொடூரமாகத் தாக்கி, அவர்களின் முகங்களை உருத்தெரியாமல் சிதைத்தனர். அவர்களின் பிறப்புறுப்புக்களை அறுத்தெறிந்தனர். பின்னர் அவர்களை வானத்துக்கும், பூமிக்குமாகத் தூக்கிப் போட்டுப் பந்தாடியே கொன்றனர்.

அந்த நால்வரின் மூச்சு அடங்கிய பிறகு, அவர்களின் உடல்களில் இனி தாக்கிக் காயப்படுத்துவதற்கு இடமே இல்லை என்ற பிறகு, சாதிவெறிக் கும்பலின் காமவெறியும், பழி தீர்த்துக் கொள்ளும் இரத்த வெறியும் அடங்கிய பிறகு, நால்வரின் பிணங்களும் மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டு அக்கிராமத்திற்கு அப்பாலுள்ள கால்வாயில் வீசியெறியப்பட்டன. ''பைய்யாலாலா, அப்படியொருவர் இக்கிராமத்தில் வசிப்பது எங்களுக்கே தெரியாதே'' என மேல்சாதி பெண்கள் சாதிக்கும் அளவிற்கு, தாக்குதலுக்குப் பிறகு கயர்லாஞ்சியில் சாதிக் கட்டுப்பாடு நிலவுகிறது.

இச்சம்பவம் போலீசுக்குத் தெரியாமல் நடந்து விட்டதாகக் கூற முடியாது. செப். 29 மாலை தனது வயல் வேலைகளை முடித்து விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த பைய்யாலால், கிராமச் சதுக்கத்தில் தனது குடும்பமே மேல்சாதி வெறியர்களால் தாக்கப்படுவதைப் பார்த்தவுடன், அந்தக் கொலைகாரர்களின் பார்வையில் பட்டுவிடாமல், அருகில் உள்ள துஸாலா கிராமத்திற்குத் தப்பியோடி, தனது உறவினர் சித்தார்த் வீட்டில் இருந்து போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். இதற்கு முன்பாகவே, பைய்யாலாலின் மனைவி சுரேகா, ஆதிக்க சாதி வெறியர்களால் மிரட்டப்பட்டவுடனேயே வார்தி கிராமத்திலுள்ள தனது உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்ததோடு, சித்தார்த்தின் சகோதரர் ராஜேந்திராவுக்கும் ஆபத்தை உணர்த்தித் தகவல் கொடுத்துள்ளார். பைய்யாலால் போலீசுக்குத் தகவல் கொடுக்கும் முன்பாகவே, ராஜேந்திரா போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்.

அநாதரவான நிலையில் இருக்கும் இத்தாழ்த்தப்பட்டோரின் குரல்களை உள்ளூர் போலீசார் வேண்டுமென்றே அலட்சியப்படுத்தினர். சம்பவம் நடந்து முடிந்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் கழித்து பாபன் மேஷ்ராம் என்ற ஒரேயொரு போலீசுக்காரர், சம்பிரதாயத்துக்காக கயர்லாஞ்சி கிராமத்தை எட்டிப் பார்த்துவிட்டு உடனே திரும்பி விட்டார். பைய்யாலாலும், ராஜேந்திராவும் போலீசுக்குத் தகவல் கொடுத்தது பற்றியும் போலீசின் கோப்புகளில் எந்தப் பதிவும் செய்யாமல் மறைத்து விட்டனர்.

மறுநாள் (செப்.30) கயர்லாஞ்சி கிராமத்தில் இருந்து 12 கி.மீ தொலைவு தள்ளி பிரியங்காவின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. இதனை விபத்தாக போலீசார் பதிவு செய்தனர். இதனிடையே பைய்யாலால் மீண்டும் போலீசாரை அணுகி, தனது குடும்பத்தினரைக் காணவில்லை எனப் புகார் செய்தார். இதன்பிறகுதான், போலீசார் சடலங்களைத் தேடத் தொடங்கினர்.


பிரியங்கா போட்மாங்கே

இத்தாக்குதல் பற்றிய விவரங்கள் மெதுவாக வெளியுலகுக்குத் தெரிந்து, பல்வேறு ஜனநாயக அமைப்புகளும், தாழ்த்தப்பட்டோரும் போராடிய பிறகுதான், மகாராஷ்டிரா காங்கிரசு அரசு அசைந்து கொடுத்தது. இத்தாக்குதல் தொடர்பாக இதுவரை 44 பேர், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்டு பல்வேறு கிரிமி


படிப்பகம்

www.padippakam.com

னல் குற்றங்களின் கீழ் கைது செய்யப் பட்டிருந்தாலும், அவர்கள் மீது ''கற்ப ழிப்பு'' குற்றச்சாட்டோ, சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டோ சுமத்தப்பட வில்லை.

சுரேகா, பிரியங்காவின் உடல்க ளைப் பிரேதப் பரிசோதனை செய்த அரசு மருத்துவர், ''அவர்கள் கற்பழிக் கப்படவில்லை'' என அறிக்கை கொடுத் திருப்பதோடு, போலீசார் அது பற்றிய விவரங்களைத் தங்களிடம் கேட்க வில்லை என்றும் சொல்லியிருக்கிறார். எனினும், ''பாலியல் வன்புணர்ச்சி குற் றச்சாட்டு தொடர்பாக இரண்டாவது பிரேதப் பரிசோதனை அக்.4 அன்று நடந்தது. ஆனால், அதற்குள் அப்பெண் களின் உடல்கள் மிகவும் அழுகி விட்ட தாலும்; முதல் பிரேதப் பரிசோதனை யின் பொழுது அறுத்து எடுக்கப்பட்ட கர்ப்பப்பை மற்றும் பெண் குறி திரவங்கள் சட்டப்படி பாதுகாக்கப் படாமல் அழிக்கப் பட்டு விட்டதாலும், பாலியல் வன்புணர்ச்சி நடந்ததற்கான அறிவி யல்பூர்வமான ஆதாரம் இல்லை'' என அதிகார வர்க்கம் கையை விரித்து விட்டது.

அப்பெண்கள் பாலி யல் ரீதியாகத் தாக்கப் பட்டதற்கு அறிவியல் ஆதாரம் திட்டமிட்டே அழிக்கப்பட்டது என் றால், அத்தாக்குதலைக் கண்ணால் பார்த்த பைய்யாலாலின் சாட்சியமோ திட்ட மிட்டே புறக்கணிக்கப்படுகிறது. இது மட்டுமின்றி, முக்கிய குற்றவாளிகளுள் ஒருவராக பைய்யாலாலால் அடை யாளம் காட்டப்பட்டுள்ள, கயர்லாஞ்சி கிராமத் தலைவர் உபாஸ்ராவ் காந்தே டையும் போலீசார் கைது செய்ய மறுக் கின்றனர்.

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி, தலித் மக்கள் மீது எவரேனும் கும்ப லாய் வன்முறைத் தாக்குதல் நடத்தி னால், ஒட்டு மொத்த கிராமத்துக்கே பத்து இலட்சம் ரூபாயிலிருந்து இருபது லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக் கப்பட வேண்டும். அரசு இச்சட்டப் பிரி வையும் அமல்படுத்த மறுக்கிறது.

ஒப்புக்காகக் குற்றவாளிகளுள் சில ரைக் கைது செய்வது; பைய்யாலால் போட்மாங்கேக்கு நட்டஈடும், அரசு வேலையும் கொடுத்து, அரசின் நடுநி லைத் தன்மையைக் காப்பாற்றிக் கொள் வது; இதன் மூலம் இப்பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்து விடுவது என்ப துதான் அரசின் திட்டம். ஆனால், பைய் யாலாலோ குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் நீதிதான் எனக்கு வேண்டுமே தவிர, அரசின் சன் மானங்கள் தனக்குத் தேவையில்லை எனக் கூறி, மகாராஷ்டிர அரசின் முகத் தில் கரியைப் பூசிவிட்டார்.

இச்சம்பவம் நடந்து முடிந்த ஒரு சில நாட்களிலேயே, அம்பேத்கர் புத்த மதத்துக்கு மாறியதை நினைவு கூறும் பொன்விழா நிகழ்ச்சி நாக்பூரில் நடை பெற்றது. இவ்விழாவுக்குத் திரண்டு வந்த தாழ்த்தப்பட்டோர், கயர்லாஞ்சி சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டத் தில் இறங்கிவிடக் கூடாது என்பதற்கா கவே, பாதுகாப்பு என்ற பெயரில் பெரும் போலீசு பட்டாளம், விழா நடந்த தீக்ஷா பூமியைச் சுற்றி வளைத் துக் கொண்டது.

அன்று அந்த விழா தீண்டாமைக்கு எதிரான பெரும் போராட்டமாக மாற றப்படாதது தாழ்த்தப்பட்ட அமைப்புக ளிடம் அரசியல் முன்முயற்சி இல்லாத தைக் காட்டினாலும், அதைத் தொடர்ந்த நாட்களில் நாக்பூர், பந்தாரா, யவட் மால் பகுதிகளில் கயர்லாஞ்சி தாக்குத லைக் கண்டித்து ஊர்வலங்களும் ஆர்ப் பாட்டங்களும் நடைபெற்றன. இந்தப் போராட்டங்களில் சில, போலீசாருட னான மோதலாகவும் மாறின. இப்போ ராட்டங்களை நடத்துபவர்களை முன் னெச்சரிக்கையாகக் கைது செய்வது; இரண்டு மூன்று நாட்கள் சட்டவிரோ தக் காவலில் வைப்பது; நாக்பூரில் இருந்து கயர்லாஞ்சிக்குச் செல்வதாகத் திட்டமிடப்பட்டிருந்த ஊர்வலத்திற்குக் கொடுத்த அனுமதியை மறுப்பது என இப்போராட்டங்களை ஒடுக்குவதில் அரசு மும்முரமாக உள்ளது.

குறிப்பாக, மகாராஷ்டிர மாநில அரசின் உள்துறை அமைச்சர் ஆர்.ஆர். பாட்டில், இப்போராட்டங்களை நக்சல் பாரிகள் தூண்டிவிடுவதாகக் கூறி, தீண் டாமைக்கு எதிராகச் சட்டபூர்வ வழி யில் போராடுவதைக் கூட பயங்கரவாத மாகக் காட்ட முயன்றார். எனினும், உள்ளூர் அளவில் செயல்படும் 20-க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒன் றாக இணைந்து இப்படுகொலைக்கு நீதி கேட்டு குரல் கொடுத்து வருகின்றன.

கயர்லாஞ்சி தாக்குதல் ஒன்றும் அரி தாக, அபூர்வமாக நடந்துவிட்ட சம்ப வம் அல்ல. தாழ்த்தப்பட்டோர் மீது இப் டிப்பட்ட தாக்குதல்கள் நடக்கும் ஒவ் வொரு முறையும், அதற்கான பழியை அத்தாக்குதலில் ஈடு பட்ட சாதிவெறியர்கள் மீது, அவர்களை ஆத ரிக்கும் ஓட்டுக் கட்சிகள் மீது, அதிகார வர்க்கத் தின் மீது போட்டு விட்டு, பெரும்பான் மையான மக்கள் - மாற்று மதத்தினரையும் சேர்த்துதான் - அமைதி யாகி விடுகின்றனர். சாதிவெறியைப் போன்றே, இந்த அமை தியும், கண்டு கொள்ளா மையும் அபாயகரமான துதான்.

''இப்பவெல்லாம் யார் சார் சாதி பார்க்கு றாங்க?'' எனத் தோளைக் குலுக்கிக் கொள்ளும் நகர்புறத்து படித்த நடுத்தர வர்க்கத்தினரில், எத்தனை பேரின் மனச் சாட்சியை இச்சம்பவம் உலுக்கியிருக் கும்? பிரியங்கா மட்டு, ஜெஸிகாலால் போன்ற மேல்தட்டு பெண்களின் படு கொலைக்கு நீதி கேட்டு ஊர்வலம் போன கனவான்களில், எத்தனை பேர் சுரேகாவுக்காக, பிரியங்காவுக்காக நீதி கேட்டுப் போராட வந்திருக்கிறார்கள்? இத்தாக்குதலை நடத்திய சாதிவெறியர் கள் ஏன் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்படுவதில்லை? இப்படிப்பட்ட தாக்குதலில் ஈடுபடும் சாதிவெறியர் களை, அச்சாதியைச் சேர்ந்த ''அப்பாவி மக்கள்'' ஏன் ஒதுக்கி வைப்பதில்லை? - இவை போன்ற கேள்விகளை உங்களி டமே கேட்டுப் பாருங்கள். அதற்கான பதிலில்தான் நீங்கள் சாதிய சமூகத்தை எதிர்ப்பவரா, இல்லை ஆதரிப்பவரா என்ற உண்மை உங்களுக்கே தெரியக்கூடும்!

**• கவி**



**கயர்லாஞ்சிப் படுகொலைகளைக் கண்டித்து, மகாராஷ்டிரா அரசு தலைமைச்செயலகம் முன்பு தாழ்த்தப்பட்ட அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**



படிப்பகம்

# கோக்கின் புதிய கைக்கூலி
# நடிகை ராதிகாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

கொலைகார 'கோக்'கிற்கு எதிராக நாடெங்கும் மக்களி டம் விழிப்புணர்வும் போராட்டங்களும் தொடரும் சூழலில், கோக்கின் சரிந்துவிட்ட சந்தையை முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்த நடிகை ராதிகா கிளம்பியிருக்கிறார். ''கோக்கில் எந்த நச் சுத் தன்மையும் இல்லை; கோக்கில் என்ன மிக்ஸ் பண்ணுகிறார் கள் என்பதிலிருந்து எல்லா சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு பெற்றேன்; எனக்கு நம்பிக்கை இருக்கு, குடிக்கிறேன். நீங்களும் குடிக்கலாம்'' என்று பல கோடி ரூபாய் பெற்றுக் கொண்டு விளம்பரம் செய்து வருகிறார்.

கோக்கினால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு கேரளத்தின் பிளாச்சிமடா கண்ணெதிரே சாட்சியமாக உள்ளது. கோக் கில் நஞ்சு கலந்துள்ளதை ஆதாரங்களோடு அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் அம்பலப்படுத்திக் காட்டி யுள்ளது. கோக்-பெப்சியை ஓரிரு மாநிலங்கள் தடை செய் துள்ளன. கல்லூரி வளாகங்க ளில் விற்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது. நாடாளுமன்ற வளாகத்தில் கூட தடை செய் யப்பட்டுள்ளது. மைய சுகாதார அமைச்சர் அன்புமணி, ''கோக்கில் நச்சுத்தன்மை இல்லை என் நடிகர்கள் விளம்பரம் செய்யக் கூடாது'' என அறிவுறுத்தியிருக்கிறார்.




இத்தனைக்கும் பின்னரும், நாட்டையும் மக்களையும் அடி மையாக்கி வரும் கொலைகார கோக்கை நியாயப்படுத்தி கூலிப் பிரச்சாரம் செய்யும் நடிகை ராதிகாவின் திமிர்த்தனத்தையும், சமூக உணர்வற்ற கைக்கூலித்தனத்தையும் எதிர்த்து, ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து 23.11.06 அன்று காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. சென்னையில் நடிகை ராதிகா வின் ''ராடன் தொலைக்காட்சி'' நிறுவனத்துக்கு முன்பாக, செங்கொடி ஏந்தி பெண்கள் - குழந்தைகளுடன் திரண்டு முற்றுகையிட்டு, விண்ணதி ரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், ''கோக் கிற்கு விளம்பரம் செய்வதை உடனடியாக நிறுத்த வேண் டும். இல்லையெனில், நடிகை ராதிகாவுக்கு எதிராகத் தமிழக மெங்கும் புரட்சிகர அமைப்பு கள் முற்றுகைப் போராட்டங் களை நடத்தும்'' என்று எச்ச ரிக்கை விடுக்கப்பட்டது.

— பு.ஜ. செய்தியாளர்கள்.

# வாசகர் கடிதம்

• அணுசக்தி ஒப்பந்தம் மூலம் அமெ ரிக்காவுக்கு அடிமைச் சேவகம் செய்யும் ஆட்சியாளர்களைப் பற்றி பத்து பக்கங்க ளுக்கு ஒரு விரிவான கட்டுரை எழுதுவதை விட, பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்த அட்டைப்படக் கேலிச் சித்திரம் எடுப்பாக அமைந்துள்ளது.

– சங்கரலிங்கம், நாமக்கல்.

• பார்ப்பன பக்தியுடன் ஏகாதிபத்திய சேவை செய்யும் சி.பி.எம். கட்சியினரை அம்பலப்படுத்திக் காட்டியது அருமை. இனி வரும் காலங்களில் சி.பி.எம். கட்சியி னர் பக்தியோடு கோவில்களுக்குக் காவடி தூக்கிப் புரட்சி செய்யக் கிளம்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

– இராணி, மாத்தூர்.

• மணிப்பூர் வீராங்கனை ஷர்மிளா வின் போர்க்குணமும் போராட்ட உறுதியும் மெய்சிலிர்க்க வைக்கிறது. இத்தகைய உயர்ந்த பண்புகளை நாம் தொடர்ந்து பின் பற்ற வேண்டும்.

– பகத், பென்னாகரம்.

• சுபாஷ் சக்ரவர்த்தி அடுத்த கட்டமாக தமிழ்நாடு பார்ப்பன சுஜாதா, மதனுடன் சேர்ந்து வேதத்திலும், உபநிடதத்திலும் மார்க்சிய கருத்துக்கள் உள்ளதாக உபதே சிப்பார். இதற்கு பிமன்போஸ் ஜால்ரா போடலாம். பூணூல் கம்யூனிஸ்டுகள் சந்தி யாவந்தனம் செய்து இந்து தர்மத்தோடு புரட்சி செய்யலாம். பார்ப்பன கம்யூனிஸ்டு கள் எதையும் செய்வார்கள்; யார் கண்டது?

– ம. கிருஷ்ணமூர்த்தி, புதுக்கோட்டை.

• ஜார்கண்டு மாநிலத்தில் 50 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்ட துயரச் செய்தியை, தொலைக்காட்சித் தொடரைப் பார்த்துக் கண்ணீர் விடும் அற் பத்தனத்துடன் ஒப்பிட்டு வர்க்க உணர் வோடு எழுதியிருப்பது சிறப்பு.

– ஜீவா, செயங்கொண்டம்.

• தனியார்மயம் என்பது பகற்கொள் ளைதான் என்பதை அரசின் கணக்கு - தணிக்கை அறிக்கையிலிருந்து நிரூபித்துக் காட்டியது அருமையாக உள்ளது. இப் போது அடிக்கட்டுமானத் துறையிலும் தனி யார்மயம் புகுத்தப்பட்டு, சூறையாடல் நடப்பதை எளிமையாக விளக்கியிருப்பது பெரிதும் பயனளித்தது.

– அ.ப., கொத்தமங்கலம்

• பு.ஜ. இதழின் அட்டைப்படத்தைப் பார்த்த பல வாசகர்கள் ஆச்சரியத்தோடு இதழை வாங்கிப் பாராட்டினார்கள். போலி கம்யூனிஸ்டுகளின் பார்ப்பன பக்தியை அம்பலப்படுத்திக் காட்டியதன் மூலம், உண்மையான கம்யூனிச இயக்கம் எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக கட்டுரை அமைந்திருந் தது. விவசாயக் கடன் தள்ளுபடியின் பின் னுள்ள மோசடிகளைப் பற்றித் தமிழகம் தழுவிய விவரங்களைத் தொகுத்து எழுதி னால் பெரிதும் பயனளிக்கும்.

– வாசகர் வட்டம், தஞ்சை.

• மன்மோகன் சிங்கின் ஏகாதிபத்திய அடிமைத்தனத்தை அட்டைப்படக் கேலிச் சித்திரம் எடுப்பாக உணர்த்தியது. தேசப் பாதுகாப்புக்காகவே இந்திய இராணுவம் உள்ளதாக இன்னமும் நம்பிக் கொண்டிருப் பவர்களுக்கு, ''சந்தி சிரிக்கும் ஆயுத பேர ஊழல்'' எனும் கட்டுரை நல்ல சவுக்கடி. தனியார்மயத்தின் பகற்கொள்ளையையும், சட்டமும் நீதியும் இக்கொள்ளையை அங்கீ கரிப்பதையும், தணிக்கை அதிகாரியின் அறிக்கையிலிருந்து விளக்கிய கட்டுரை எளிமையாக உணர்த்தியது. வாசகர் வட் டக் கூட்டத்தின் இறுதியில், தகவல் அறி யும் உரிமைச் சட்டம் என்பது இன்னு மொரு காகிதச் சட்டம்தான் என்பதை விளக்கி, வழக்குரைஞர் தோழர் இராமலிங் கம் ஆற்றிய சிறப்புரை, வாசகர்களுக்குப் புதிய பார்வையை அளிப்பதாக அமைந் தது.

– வாசகர்வட்டம், திருச்சி.

• இம்மாத இதழின் அட்டைப்படம் வாசகர்களிடையே விவாதத்தைத் தூண்டி, மன்மோகன் சிங் விசுவாசமான அமெரிக்க அடிமைதான் என்பதை வாசகர்களே விளக் குவதாக அமைந்தது.

– வாசகர் வட்டம், ஓசூர்.

www.padippakam.com

## திரவ வெடிகுண்டு பீதி:

# அமெரிக்க - பிரிட்டிஷ் கோயபல்சுகளின் கூத்து

வாய்ச்சவடால் அடித்துக் கொண்டு தனது வட்டாரத்து மக்களையே அஞ்சி நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் ரவுடிகள், ஒவ்வொரு நொடியும் தனது உயிருக்கு யாராலும் ஆபத்து வந்துவிடுமோ எனப் பயந்து நடுங்கிக் கொண்டிருப்பர். அதைப் போல்தான், இன்றைக்கு உலகமெல்லாம் தனது மேலாதிக்கத்திற்கு அடி பணிய வேண்டுமென்று கருதிச் செயல்படுகின்ற ஏகாதிபத்தியங்களும் தமது ஆதிக்கத்துக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற பீதியில், எதற்கெடுத்தாலும் தீவிரவாதம், பயங்கரவாதம் எனப் பழி போட்டு, மக்களை நிரந்தர அச்சத்தில் ஆழ்த்தி வருகின்றன.

இப்படித்தான், கடந்த ஆகஸ்ட் 12 அன்று லண்டனில் இருந்து அமெரிக்கா செல்லக்கூடிய ஒன்பது விமானங்களை திரவ வெடிகுண்டு வைத்து பயங்கரவாதிகள் தகர்க்கப் போவதாக ஏகாதிபத்தியவாதிகள் பீதியூட்டினர். கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் அனைத்துப் பயணிகளையும் சல்லடை போட்டுச் சோதித்தனர். பற்பசை, பாட்டில் தண்ணீர், ஷாம்பூ பாக்கெட், குளிர்பானம், அவசியமான மருந்துகள் என அனைத்துவிதமான திரவப் பொருட்களையும் விமானத்தில் எடுத்துச் செல்ல தடை விதித்தனர்.

பயங்கரவாதிகள், தண்ணீரில் கூட வெடிகுண்டு செய்து விட்டனர் என்றும் கதை கட்டி விட்டனர். தண்ணீரில் வெடிகுண்டா? விஞ்ஞானிகளே மண்டை குழம்பிப் போய்விட்டனர். தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றிய பைபிளின் கதையை விட படுசுவாரசியமான கதையாய் அமைந்தது, இங்கிலாந்து உளவுத் துறையின் திரைக்கதை.

திரவ வெடிகுண்டு தயாரிக்கச் சதித் திட்டம் தீட்டியதாக இங்கிலாந்தில் வசித்து வரும் பாகிஸ்தானியர் 24 பேர் கைது செய்யப்பட்டனர். அந்த 24 பேரில் ஒருவர்கூட விமானப் பயணத்திற்கான பயணச்சீட்டு வாங்கி இருக்கவில்லை என்பதும், சிலரிடம் ''பாஸ்போர்ட்டே'' இல்லை என்பதும்தான் இந்தப் பயங்கரவாதப் பீதி நாடகத்தில் வேடிக்கையான காட்சி.

கைதானவர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து எவ்விதமான பணப்பரிவர்த்தனைகளும் நடந்திராதபோதிலும், அவர்களின் வங்கிக் கணக்குகளை அரசு முடக்கியது. அவர்களுக்கு எதிராக சிறு துரும்பைக்கூட ஆதாரம் காட்ட முடியாத போதிலும், வெடிகுண்டு பயங்கர பீதியைக் கிளப்பி விட அனைத்துவிதமான பிரச்சார சாதனங்களையும் டோனி பிளேரின் அரசு முடுக்கி விட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து ஒரு குண்டுகூடக் கைப்பற்றப்படவில்லை. அவர்களிடமிருந்து குண்டு தயாரிக்கும் முறை பற்றியோ, அதை வெடிக்கச் செய்யும் முறை பற்றியோ எவ்விதமான பிரசுரங்களும் அகப்படவில்லை. அவர்களிடமிருந்து பாட்டில்களோ, திரவ வேதிப்பொருட்களோ பிடிபடவில்லை. வேறு எங்கிருந்து இவர்களால் குண்டுகளை வரவழைக்க முடியும் என்ற கற்பனையைக் கூட இங்கிலாந்து சூரப்புலிகளால் சொல்ல முடியவில்லை.

பிரிட்டிசு போலீசு உயர் அதிகாரி பீட்டர் கிளார்க் ஒருபடி மேலே போய் ''குண்டு தயாரிக்கத் தேவையான ரசாயனத்தையும், எலெக்ட்ரானிக் கருவியையும் கண்டுபிடித்து விட்டோம்'' என்று ஒரே போடாய்ப் போட்டார். அதுவரை திரவ வெடிகுண்டு எனச்சொல்லி வந்த போலீசார், இப்போது சொன்ன ஆதாரமோ பழைய வகை வெடிகுண்டு சம்பந்தமானதாய் இருந்தது.

கைது செய்த பாகிஸ்தானியரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 400 கம்ப்யூட்டர்கள், 200 செல்போன்கள், 8000 டிவிடி, சிடிக்களை போலீசு பட்டியல் இட்டதும், அவர்களின் துப்பறியும் அதிபுத்திசாலித்தனம் சந்தி சிரித்தது. இந்தப் பொருட்களை வைத்திருப்பதைக் குற்றம் என்றால், பல லட்சம் லண்டன்வாசிகள் சிறையில்தான் கிடக்க வேண்டி வரும்.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் கம்ப்யூட்டரில் ஜிஹாத் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் சில செய்திகள் இருந்ததாம். இணையதளத்தில் இருந்து ஜார்ஜ் புஷ் கூட இறக்குமதி செய்து படிக்கத்தக்க ஆவணம் ஒன்றையே ஆதாரம் காட்டி இந்தக் கதைக்கு கிளைக்கதைகள் தயாரித்தனர். இதை ஓர் ஆதாரமாகக் காட்டுவது எந்த நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என பிரிட்டனின் சட்ட நிபுணர்களே கூறுகிறார்கள்.

அடுத்து, கைப்பற்றப்பட்ட கணினிகளின் ''ஹார்டு டிஸ்க்''குகளைக் கழற்றி எடுத்து 69 மாடிகள் ஏறிப்போய் அவற்றை அழிக்கவும் செய்தனர், இந்த அதிமேதாவிகள். பிறகு, பாகிஸ்தானியரைக் கைது செய்ய விசித்திரமான காரணத்தைக் கண்டறிந்தார்கள். கடந்த ஆண்டில், கைதானவர்களில் சிலர் ஆண்டு இறுதி விடுமுறையை பாகிஸ்தானில் கழித்தனராம். இது போன்ற கடுமையான குற்றத்தை செய்ததற்காக ஒருவரைக் கைது செய்ய முடியும் என்றால், பல ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்களை உள்ளே தள்ள முடியும் என்ற விசயம், சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் 'ஜேம்ஸ்பாண்டு' மூளைக்குத் தெரியாமல் போய்விட்டது.

17 வயதேயான பையன் ஒருவனை ''தீவிரவாதத்தைத் தூண்டும் பிரசுரம் வைத்திருந்தாய்'' எனக் குற்றம் சுமத்தி கைது செய்துள்ளனர். அப்பிரசுரத்தை, அவனோ, அவன் குடும்பத்தாரோ வாசித்தார்களா? அதனை அவன் பிறருக்குத் தந்தானா என்பதெல்லாம் ஆராயப்படவே இல்லை. கைதானவர்களில் இரண்டு பேரை மட்டும் விடுவித்து விட்டு, 11 பேர் மீது குற்றம் சாட்டி, மீதம் 11 பேரை விசாரணை ஏதுமின்றி சட்டவிரோதக் காவலில் வைத்த பிரிட்டிஷ் போலீசுக்கு கைது செய்ததன் முகாந்திரங்களைக் காட்டமுடியாததால், இப்போது கைதானவர்களுக்கு ஸ்பெயின், இத்தாலி, மேற்காசிய நாடுகளுடன் தொடர்பு உள்ளது என்றும் புதிய கதையை எழுதத் தொடங்கியுள்ளனர்.

இவர்களைத் தவிர, தமது பணியை ஒட்டி பயணம் செய்த ஆசிய நாட்டவர் 53 பேரை சந்தேகத்தின்பேரில் கைது செய்ததுடன், அவர்களை இரண்டு நாட்களாய் அலைக்கழித்தனர். பிரிட்டனில்


படிப்பகம்

www.padippakam.com

உள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் ஆசிய மாணவர்களை, அதிலும் குறிப்பாக இசுலாமிய மாணவர்களை வேவு பார்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டின் செய்தி ஊடகங்களே சொல்லுகின்றன.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்களின் தகர்ப்பிற்குப் பின்னர், இம்மாதிரியான பீதியூட்டல்களால், அமெரிக்க பொதுமக்கள் படும் அவதி உச்சத்தை எட்டி உள்ளது. ஜான் கென்னடி விமான நிலையத்தில் கைக்குழந்தையுடன் வந்த ஒரு தாய்க்கு நிகழ்ந்த கொடுமை, அமெரிக்க உளவு-போலீசுதுறையினரின் வக்கிரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. விமானப் பயணத்தின் போது குழந்தைக்குப் புகட்டவென மூன்று புட்டிகளில் தாய்ப்பாலை எடுத்து வந்திருந்த அப்பெண்ணிடம் போலீசார் என்ன அதுவெனக் கேட்டனர். தாய்ப்பால் என்று சொல்லியும் நம்பாத அவர்கள், அத்தாயையே அதைக் குடித்து நிரூபிக்கச் சொன்னார்கள். மூன்று பாட்டில்களும் காலியான பிறகே அந்தப் பெண்ணைப் பயணம் செய்யவே அனுமதித்தனர்.



விமானப் பயணிகள் தங்கள் வசம் ஷாம்பு போன்ற திரவப் பொருட்களைக் கூட வைத்துக் கொள்ளக்கூடாது எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால், அவற்றைக் குப்பைக் கூடைக்குள் வீசி எறியும் அமெரிக்கப் பயணி.

லண்டன் மாநகரே, திரவ வெடிகுண்டுக்கு அலறிப்போய் நடுங்கிக் கிடந்த வேளையில், இதைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் பிளேர், சுற்றுலா சென்றிருந்தார். அவரின் எஜமானன் புஷ்ஷும் இதைப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏற்கெனவே சொல்லி வைத்துப் பரப்பப்பட்ட நூதனப் பொய்தான் இது என இருவருக்கும் நன்றாகவே தெரியும். பிரிட்டனின் உயர்மட்ட அதிகாரிகள் கூட, புஷ்ஷும், பிளேரும் முன்னமேயே இந்நாடகத்தை அறிந்திருந்தனர் என்றே சொல்கின்றனர். இவ்வளவு பரபரப்புக்கு நடுவிலும், நியூயார்க்கின் பங்குச் சந்தை சரியவே இல்லை என்பதில் இருந்தே, ஏகாதிபத்தியத்தின் பொய்யை அந்நாட்டு மக்களே நம்பத் தயாராயில்லை என்பது நிரூபணமானது.

திடீரென ஏன் இத்தகைய பயங்கரவாதப் பீதி கிளப்பி விடப்பட்டது?

டோனி பிளேரும், புஷ்ஷும் ஈராக் மீது போர் தொடுக்கக் காரணமாய், சதாம் ஹுசேன் உயிர்க்கொல்லி ஆயுதங்களைத் தயாரித்தார் என்றுசொல்லி வந்த பொய்யை நம்பும் அமெரிக்க, இங்கிலாந்தியர்களின் எண்ணிக்கை பெருமளவில் சரிந்து போய், அவர்களின் நம்பகத்தன்மையை மக்கள் கேள்விக்குள்ளாக்கி வருகின்றனர். பெருமளவில் நடைபெறும் போர் எதிர்ப்புப் பேரணிகளே இதற்கு சான்று. புஷ்ஷின் ஈராக், ஆப்கான் ஆக்கிரமிப்புப் போர்களையும், இசுரேலின் லெபனான் மீதான தாக்குதல்களையும் ஆதரித்தமைக்காக, பிளேரின் அரசு மக்களின் வெறுப்பை சம்பாதித்துள்ளது. பிளேரின் தொழிற்கட்சியிலேயே எம்.பி.க்கள் பலரும் பிளேரை எதிர்த்துக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டனர்.

இசுரேலின் லெபனான் தாக்குதலை ஆதரிக்கும் புஷ்ஷின் மேலாதிக்கக் கொள்கை, அமெரிக்க மக்களின் வெறுப்பை சம்பாதித்திருந்தது. எதிர்நோக்கி இருந்த அமெரிக்க காங்கிரசு தேர்தலில், குடியரசுக் கட்சி பெரும்பான்மை பெருவது கேள்விக்குறியாகி இருந்தது. சொந்த நாட்டில் மதிப்பிழந்து போய் நிற்கும் இந்தப் போர்வெறியர்கள், தமது செல்வாக்கைத் தூக்கி நிறுத்த, மக்களை வேறொரு விசயம் நோக்கி திசை திருப்புவது தேவையாய் இருந்தது.

இனவெறி நாசிசக் கொடுங்கோலன் ஹிட்லர், ஜெர்மனியின் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு தாமே தீ வைத்துவிட்டு, கம்யூனிஸ்டுகள் தான் தீ வைத்தனர் என அபாண்டமாய் பழி சுமத்திவிட்டு, கம்யூனிஸ்டுகளையும் யூதர்களையும் வேட்டையாடியதைக் கடந்த நூற்றாண்டின் வரலாறு சொல்கிறது. பொதுவுடைமை இயக்கத்தை வேரறுக்கவும், ஆரிய ஜெர்மானிய தேசிய வெறியை வளர்க்கவும், இவ்வாறு கேவலமான பொய்கள் பலவற்றை ஹிட்லர் பரப்பிட, அவனுக்கென்று கோயபல்சு போன்ற திறமையான பொய்ப் பிரச்சாரகர்கள் அன்று இருந்தனர். ஆனால், அத்தகைய திறமையாளர்கள் யாரும் தமக்குக் கிடைக்கவில்லையே என ஜார்ஜ் புஷ்ஷும், டோனி பிளேருக்கும் வருத்தம் இருக்கக்கூடும்.

ரசிய சமூக ஏகாதிபத்தியத்துடன் பனிப்போர் நிலவிய காலகட்டங்களில், ரசியாவை எதிரியாய் கட்டமைத்து தேசிய வெறியை - கம்யூனிச எதிர்ப்பை அமெரிக்கரிடையே உருவாக்கி வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இன்று சொல்லிக் கொள்ளும்படியான எதிரி இல்லாமல், ஒற்றைத் துருவ உலகம் உருவாகி விட்டது. எனவே, செயற்கையான எதிரிகளை உருவாக்கி உலவ விட வேண்டிய நெருக்கடி ஏகாதிபத்தியத்துக்கு உள்ளது.

''பயங்கரவாதமே நம்முன் உள்ள இன்றைய எதிரி'' என்று தன் மக்களை நம்ப வைத்திட இம்மாதிரி பொய்களை அமெரிக்க அரசும் உளவுத்துறையும் பரப்பி வருகின்றன. இப்பீதிகளால் சரிந்த உள்நாட்டு உற்பத்தியோ, பாதாளத்தில் வீழ்ந்த உள்நாட்டு விமானச் சேவையோ அமெரிக்காவுக்கு ஒரு பொருட்டல்ல.

இந்நிலையில், பரந்து விரிந்த உலகெங்கும் குறுக்கும் நெடுக்குமாய் ஆக்கிரமிப்புப் போர்கள் பல நடத்தியிருக்கும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான உலக மக்களின் போராட்டமானது, அகிம்சா வழியில் மட்டுமே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

விளக்குமாற்றைத் தின்ற கழுதை, ஈக்கியைத்தானே கழிந்தாக வேண்டும்!

● பாலன்

www.padippakam.com

# நாடாளுமன்றத் தாக்குதல் தீர்ப்பு

# கருப்பு அங்கிகளுக்குள் ஒளிந்துள்ள காவிப்படை

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த நால்வரில், கீலானி, அஃப்ஸான் குரு ஆகிய இருவரின் விடுதலையை உறுதி செய்தும்; ஷௌகத் ஹூசைன் குருவிற்கு அளிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை 10 ஆண்டு கால கடுங்காவல் தண்டனையாகக் குறைத்தும்; முகம்மது அப்சலுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை உறுதி செய்தும் உச்சநீதி மன்றம் கடந்த ஆண்டு ஆகஸ்டில் தீர்ப்பளித்திருந்தது. இத்தீர்ப்பின் அடிப்படையில் கடந்த அக்டோபர் 20 அன்று அப்சலைத் தூக்கில் போட நாள் குறிக்கப்பட்டது. எனினும், அப்சலின் உறவினர்கள் அரசுத் தலைவர் கலாமிடம் கொடுத்த கருணை மனுவின் அடிப்படையில், இத்தூக்கு தண்டனை மறு தேதி குறிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, டிச.13, 2001 அன்று நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடந்த இரண்டாவது நாளிலேயே - டிச. 15, 2001 அன்றே எஸ்.ஏ.ஆர். கீலானி, முகம்மது அப்சல், ஷௌகத் ஹூசைன் குரு, ஷௌகத்தின் மனைவி அஃப்ஸான் குரு ஆகிய நால்வரும் தில்லி சிறப்புப் போலீசுப் படையால் கைது செய்யப்பட்டனர். போலீசின் குற்றச் சாட்டின்படியே இந்த நால்வரும் இச்சதித் திட்டத்தைத் தீட்டிய மூளைகள் கிடையாது. தாக்குதலை நிறைவேற்ற உதவியவர்கள் தாம்.

தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட ஐந்து பேரும் சம்பவம் நடந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். தாக்குதலுக்குத் திட்டம் போட்டுக் கொடுத்து இயக்கிய மூவரில், காசி பாபா காசுமீரில் போலீசுடன் நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதாகவும்; மௌலானா மசூத் அஸார், தாரிக் அகமது ஆகிய இருவரும் பாகிஸ்தானில் இருப்பதாகவும் போலீசார் கூறி வருகின்றனர்.

"நாட்டின் மீது தொடுக்கப்பட்ட போர்" எனக் கூறப்படும் இந்தத் தாக்குதல் பற்றிய புலன் விசாரணையை தில்லி சிறப்புப் போலீசார் 17 நாட்களிலேயே முடித்துவிட்டனர் இதற்குக் காரணம், தில்லி போலீசின் துப்பறியும் திறமை அல்ல. தாக்குதலில் ஈடுபட்ட ஐந்து பேரும், போலீசாரால் 'கண்டுபிடிக்கப்பட்ட' சாட்சியங்கள் அனைத்தையும், தங்களின் சட்டைப் பைகளில் வைத்துக் கொண்டுதான் தாக்குதலே நடத்தியிருக்கிறார்கள்!

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு அவர்கள் வந்த காரின் கண்ணாடியின் மீது, "முட்டாள் வாஜ்பாயியையும், அத்வானியையும் நாங்கள் கொல்வோம்" என ஒட்டப்பட்டிருந்த "ஸ்டிக்கர்"; தாக்குதலுக்கு முன்பாக, தீவிரவாதிகள் தொடர்பு கொண்ட தொலைபேசி எண்; தீவிரவாதிகள் யார் என்ற விவரங்கள் அடங்கிய அடையாள 'அட்டை - இப்படி இந்த வழக்கின் முக்கிய சாட்சியங்கள் அனைத்தும் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்தே கைப்பற்றப்பட்டுள்ளன. நகைச்சுவை படத்தில் கூட இப்படிப்பட்ட அப்பாவி சதிகாரர்களை நாம் பார்த்திருக்க முடியாது.

•••

வழக்கின் முக்கிய கட்டமான சிறப்பு நீதிமன்ற விசாரணையின்பொழுது, அப்சலுக்கு உதவி செய்ய அனுபவம் அற்ற ஒரு இளம் வழக்கறிஞர் சட்ட உதவுனராக (amicus curiae) நியமிக்கப்பட்டார். இந்த வழக்கறிஞர், அப்சலுக்கு எதிராகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட போலீசு சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்யாமல், அரசு தரப்புக்குச் சார்பாக நடந்து கொண்டார். "சட்ட உதவுனரை எதிர்தரப்பு வழக்குரைஞராகப் பார்க்க முடியாது; அவர், நீதிமன்றத்தின் நண்பனாகத்தான் நடந்து கொள்வார்" என்கிறார், பிரபல கிரிமினல் வழக்கறிஞரான ராம் ஜேத்மலானி.

"சிறப்பு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இளம் வழக்குரைஞர் இந்துமத உணர்வுள்ளவர்; அவர் ஒருமுறைகூடச் சிறைக்குச் சென்று எனது கணவரைச் சந்திக்கவில்லை. சிறப்பு நீதிமன்ற நீதிபதி திங்க்ராவும் கூட நீதிமன்றத்திலேயே வெளிப்படையாக தனது மத உணர்வை வெளிப்படுத்தினார்" என அப்சலின் மனைவி தபஸ்ஸும் விசாரணையின் நேர்மையை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

அப்சல் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருந்த பொழுதே, தனது சட்ட உதவுனரை மாற்ற வேண்டும் எனக் கோரியதோடு, எட்டு வழக்குரைஞர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுள் யாரையாவது ஒருவரைத் தனக்கு நியமிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இந்து மதவெறியர்களால் தாக்கப்படுவோமோ என அஞ்சிய அந்த வழக்குரைஞர்களுள் (அப்சலுடன் குற்றஞ்சாட்டப்பட்ட கீலானிக்கு வாதாடப் போவதாக ராம் ஜெத்மலானி அறிவித்ததையடுத்து, அவரது அலுவலகம் இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்டது) ஒருவர் கூட அப்சலுக்காக வாதாட முன் வர

இந்து மதவெறி - இந்திய தேசிய வெறிக்குப் பலியாக்கப்பட்ட அப்சல் குரு.




படிப்பகம்

வில்லை. நீதிபதி திங்க்ரா, "இதற்கு மேல் நான் எதுவும் செய்ய முடியாது" எனக் கூறி, அப்சலை நிர்க்கதியாகத் தவிக்க விட்டார்.

இது மட்டு மன்று; "நீதி விசாரணையின் போது சிறப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட கூற்றுகளை எனக்குக் காட்டாமலும்; பல்வேறு சாட்சிகள் மற்றும் எனக்கெதிராக அவர்களின் சாட்சியங்கள் குறித்த எனது மறுப்புகளையும், பதில்களையும் பதிவு செய்யாமலும், சிறப்பு நீதிமன்றம் தனது குரலை மவுனமாக்கி விட்டதாக" அப்சல், "விசாரணைக் கைதிகள் மற்றும் சிறைக் கைதிகளின் பாதுகாப்பிற்கான கழகத்திற்கு" எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தன்னைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையை அப்சலிடமிருந்து பறித்ததன் மூலம், சிறப்பு நீதிமன்றம் அவரது கழுத்தில் சுருக்கை மாட்டியது.



அப்சல் குருவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து காசுமீர் தலைநகர் சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் போலீசாருடன் மோதும் பொதுமக்கள்.

●●●

தில்லி உயர்நீதி மன்றத்திலோ இந்த வழக்கு, விநோத முரண்பாடாக நடந்து முடிந்தது. குற்றவாளிகள் நான்கு பேரும் தில்லி சிறப்பு போலீசிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை, உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. குற்றவாளிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதில் சட்டபூர்வ வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதை உயர் நீதி மன்றம் ஏற்றுக் கொண்டது. அதாவது, கொடூரமான சித்திரவதைகள், மிரட்டல்கள், உறவினர்களைப் பிணையக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு அச்சுறுத்துவது போன்ற சட்ட விரோதமான வழிமுறைகள் மூலம் தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பது வழக்கு விசாரணையில் மீண்டும் அம்பலமானது. இதன் அடிப்படையில்தான், சிறப்பு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கீலானியும், ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அஃப்ஸான் குருவும் விடுதலை செய்யப்பட்டனர். எனினும், இந்த இருவரின் விடுதலைக்குப் பொருந்திய இந்த நியாயத்தை, முகம்மது அப்சலுக்கும், ஷௌகத் குருவிற்கும் பொருத்த உயர்நீதி மன்றம் மறுத்து விட்டது.

●●●

உச்சநீதி மன்றமோ, தீர்ப்பை முன் கூட்டியே எழுதி வைத்துவிட்டு விசாரணை நாடகத்தை நடத்தியிருக்கிறது. "அப்சல், ஏற்கெனவே சரணடைந்து விட்ட தீவிரவாதி, அவருக்கும், தீவிரவாத அமைப்புகளுக்கும் தற்பொழுது எந்தவிதமான தொடர்பும் கிடையாது" என்பதை உச்சநீதி மன்றம் ஏற்றுக் கொண்டாலும், "அப்சல் இந்த நாட்டிற்கு எதிரான சதிச் செயல்களை மீண்டும் மீண்டும் நடத்துவதற்குத் துணிந்தவர்" என்று தானே இட்டுக் கட்டிய பழியை அவர் மீது சுமத்தியிருக்கிறது. "பொடா சட்டத்தின் கீழ் அப்சல் மீது வழக்குத் தொடர ஆதாரம் இல்லை" எனக் கூறியுள்ள உச்சநீதி மன்றம், அச்சட்டத்தின் கீழ் அப்சலிடமிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலங்களையும்; சந்தர்ப்ப சாட்சியங்களையும் ஆதாரமாகக் காட்டி, அவரின் தூக்கு தண்டனையை உறுதி செய்தது.

"இது எங்களின் கதையல்ல; காசுமீரின் கதை" எனக் கூறும் அப்சலின் மனைவி தபஸ்ஸும் மற்றும் அப்சலின் தாய் (பின்னால் இருப்பவர்).



அப்சல் கைது செய்யப்பட்ட விதம் குறித்து தில்லி சிறப்பு போலீசாரும், காசுமீர் போலீசாரும் அளித்துள்ள சாட்சியங்களில் உள்ள முரண்பாட்டை தில்லி உயர்நீதி மன்றமும், உச்சநீதி மன்றம் தீர விசாரித்திருந்தால், இந்த வழக்கில் அப்சல் பலிகடா ஆக்கப்பட்டிருக்கும் உண்மை அம்பலத்துக்கு வந்திருக்கும்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் உள்ளிட்ட பொருட்களைத் தங்களிடம் அப்சல் வாங்கியதாக தில்லியைச் சேர்ந்த சில கடைக்காரர்கள் அப்சலுக்கு எதிராகச் சாட்சியம் அளித்துள்ளனர். இவர்களிடம் இருந்து சாட்சியம் பெறுவதில் போலீசு, அடையாள அணி வகுப்பு நடத்துவது போன்ற சட்டபூர்வமான வழிகளைப் பின்பற்றவில்லை என உச்சநீதி மன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால், உச்சநீதி மன்றமோ, "சாதாரண பொதுமக்கள் அப்சலை ஏன் குற்றவாளியாக்க வேண்டும்?" என்ற கேள்வியை இட்டுக் கட்டி கேட்டு, போலீசின் சட்ட விரோத சாட்சியங்களைச் சட்டபூர்வமாக்கி விட்டது.

அப்சல், தில்லி உயர்நீதி மன்றத்திடம் கொடுத்துள்ள வாக்குமூலத்தில், "போலீசின் நிர்பந்தித்தினால்தான், நான் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகளை, போலீசு சொல்லியபடி அடையாளம் காட்டியதாக"க் கூறியிருக்கிறார். அதேசமயம், உயர்நீதி மன்றத்தில் அப்சலுக்காக வாதாட நியமிக்கப்பட்ட காலின் கோன்சால்வ்ஸ் என்ற வழக்குரைஞர்தான், தீவிரவாதிகளை அடையாளம் காட்டி போலீசிடம் அப்சல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறி, அரசு தரப்பின் வேலையை எளிதாக்கினார்.

காலின் கோன்சால்வ்ஸ் என்ற அந்த வழக்குரைஞர் இதை மட்டுமா சொன்னார். "தூக்கில் போடப்பட்டுச் சாவதைவிட, விஷ ஊசி போட்டு அப்

சல் சாக விரும்புவ தாக'' நீதிமன்றத் தில் தெரிவித்தார். தனது வக்கீலே தனக்குக் குழி பறித் ததை அப்சல் அப் பொழுது அறிய வில்லை. ஏனென் றால், அப்சலுக்குத் தண்டனை எப்படித் தரவேண்டும் என நீதிமன்றத்தில் வழக்குரைஞர் குழி பறித்த பொழுது, அப்சலோ, திகார் சிறையில் தனிமைக் கொட்டடியில் அடைபட்டுக் கிடந் தார்.

ஷௌகத், அப் சல், கீலானி, முகம் மது ஆகியோருக்கு இடையே, தாக்குதலுக்குச் சற்று முன்பு வரை செல்போன் தொடர்பு இருந்தது என்பதற்கு போலீசு தரப்பில் முன் வைக் கப்படும் சாட்சியம், சான்றளிக்கப்ப டாத சில ''பில்'' பதிவுகள்தான். ஒரே நேரத்தில் ஒரே 'சிம் கார்டில்' இருந்து இரு அழைப்புகள் செய்யப்பட்டுள்ளது என இப்பதிவு தெரிவிக்கிறது. இரு வெவ்வேறு எண்ணுள்ள செல்போன்க ளில் இருந்து இவை பேசப்பட்டுள்ளன. ஒரே சிம் கார்ட் இரண்டு வெவ்வேறு செல்போன்களிலிருந்து ஒரே நேரத்தில் எப்படி இயங்க முடியும் என்ற கேள்வியை மெத்தபடித்த நீதிபதிகள் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

- அப்சலுக்கு எதிரான சந்தர்ப்ப சாட்சியங்களில் உள்ள இவை போன்ற முரண்பாடுகளை, சட்டவிரோத நடை முறைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தான், உச்சநீதி மன்றம் தூக்கு தண்ட னையை உறுதிப்படுத்தியுள்ளது. குற் றம் சாட்டப்பட்டு தன் முன் நிறுத்தப்பட் டுள்ள நான்கு குற்றவாளிகளுள் ஒருவ ரையாவது கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்பது நீதிபதிகளின் நோக் கமாகவே இருந்திருக்கிறது. இந்தப் பழி வாங்கும் வெறியை அவர்கள் மறைத் துக் கொள்ளவும் இல்லை. ''குற்றவா ளிக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் மட்டுமே சமூகத்தின் பொது மன சாட்சியைத் திருப்திபடுத்த முடியும்'' எனப் பச்சையாகவே நீதிபதிகள் கூறி யுள்ளனர்.

உச்சநீதி மன்றம் குறிப்பிட்டுள்ள சமூகத்தின் பொது மனசாட்சி என்பவர் கள் யார்? அப்சலைத் தூக்கில் ஏற்றி விடத் துடிக்கும் வாஜ்பாயி - அத்வானி போன்ற இந்து மதவெறியர்கள்; அக் கும்பலைத் தூக்கிப் பிடிக்கும் இந் தியா-டுடே, துக்ளக் போன்ற பத்திரிக் கைகள்; முசுலீம் எதிர்ப்பு இந்த மதவெ றியாலும், பாக். எதிர்ப்பு இந்திய தேசிய வெறியாலும் மூளைச் சலவை செய்யப் பட்டுள்ள மேல்தட்டு - மேல்சாதி நடுத் தர வர்க்கம் - இவர்கள்தான் அந்தப் பொது மனசாட்சி. இந்தக் காவி மனச் சாட்சியின் உருவகம்தான் உச்சநீதி மன் றம் என்பதை இத்தீர்ப்பு பச்சையாக எடுத்துக் காட்டிவிட்டது.




**அப்சலின் தூக்கு தண்டனையை எதிர்த்து விசாரணைக் கைதிகள் மற்றும் சிறைக் கைதிகள் உரிமை பாதுகாப்பு கழகம் தில்லியில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றும் எழுத்தாளர் அருந்ததி ராய் (இடது ஓரம்) மற்றும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட கீலானி (இடமிருந்து மூன்றாவது).**

•••

**நா**டாளுமன்றத் தாக்குதல் பற்றி தில்லி போலீசு கட்டமைத்த கதைதான் ஊடகங்கள் மூலம் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. அத்தாக்குத லுக்கு மர்மங்கள் நிறைந்த இன் னொரு பக்கம் உண்டு. அப்சல், உச் சநீதி மன்றத்தில் தனக்காக வாதாடிய வழக்குரைஞர் சுசில்குமாருக்கு எழுதிய கடிதத்தில், மர்மங்கள் நிறைந்த அந்தப் பக்கத்தை எடுத்துக் காட்டியி ருக்கிறார்.

> **நாஜிகளின் ஆட்சியின் பொழுது, ஜெர்மன் நாடாளுமன்றத்திற்கு அவர்களே தீ வைத்துவிட்டு, பழியை கம்யூனிஸ்டுகள் மீது போட்டார்கள். இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் பற்றி பாரபட்சமற்ற, நேர்மையான விசாரணை நடக்குமானால், இந்திய பாசிச சக்திகளின் சதிகளும் அம்பலத்துக்கு வரலாம்!**

''சரணடைந்த போராளியான தன்னை மிரட்டிப் பணம் பறிக்கவும்; போலீசின் ஆள் காட்டியாகச் செயல் படக் கூறியும் காசு மீரின் சிறப்பு அதி ரடிப் படை தொடர்ந்து தன்னைச் சித்திரவதை செய்து வந்ததையும்; காசுமீரின் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த துணைக் கண்காணிப்பாளர் திராவிந்தர் சிங்கின் கட்டளைப்படி தான், நாடாளுமன்றத் தாக்குதலின்போது சுட்டுக் கொல்லப் பட்ட முகம்மதுவை தான் தில்லிக்கு அழைத்து வந்ததையும்; திராவிந்தர் சிங் செல்போன் மூலம் தனக்குக் கொடுத்த கட்டளைப்படிதான், கார் உள்ளிட்டு பல பொருட்களை முகம்மதுவுக்குத் தான் வாங்கிக் கொடுத்ததையும்; தனது தம்பி ஹலால் அஹமத் குருவைப் பிணையக் கைதியாக வைத்துக் கொண்டு, தில்லி சிறப்பு போலீசு சொல் வதை ஒத்துக் கொள்ள வேண்டும் எனத் தான் தில்லியில் சித்திரவதை செய்யப் பட்டதையும்; தனது மனைவி தபஸ் ஸூம்; தனது தம்பி ஆகியோரின் பாது காப்புக்காக, தில்லி சிறப்புப் போலீசைச் சேர்ந்த துணை கமிசனர் ராஜ்பீர் சிங் சொன்னபடி தான் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்ததையும்,'' அப்சல் அந்தக் கடிதத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்.

முகம்மதுவுடன் தனக்கு ஏற்பட்ட தொடர்பை சாட்சியமாக ஏற்றுக் கொண் டுள்ள நீதிமன்றம், முகம்மதுவைத் தனக்கு அறிமுகப்படுத்தி வைத்து உத வச் சொன்ன சிறப்பு அதிரடிப் படை அதிகாரிகளை விசாரிக்க மறுப்பது ஏன்? முகம்மதுவுடன் தான் செல்போ னில் பேசிய பேச்சுக்களைச் சாட்சிய மாக ஏற்றுக் கொண்டுள்ள நீதிமன்றம், அதே செல்போன் மூலம் காசுமீர் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் தன்னைத் தொடர்பு கொண்டு விசாரித்து வந்த தைக் காது கொடுத்து கேட்க மறுப்பது

www.padippakam.com

ஏன்? இப்படி அடுத்தடுத்து அப்சல் எழுப்பும் பல கேள்விகள் இன்று திகார் சிறையில் புதையுண்டு கிடக்கின்றன.

•••

"அப்சல் என்ற தனிமனிதனின் கதை அல்ல இது; காசுமீரிலுள்ள பல இளம் தம்பதியினரின் கதை இது.... காசுமீரில் நிலவும் சூழலைப் புரிந்து கொள்ள வேண்டும். தாம் ஈடுபடாவிட்டால்கூட, காசுமீரில் உள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் கூட இயக்கங்கள் குறித்த ஏதேனும் தகவலை அறிந்திருப்பார்கள். மக்களை உளவு சொல்பவர்களாக மாற்றுவதன் மூலம், சகோதரரைச் சகோதரருக்கு எதிராகவும்; மனைவியைக் கணவனுக்கு எதிராகவும்; குழந்தைகளைப் பெற்றோர்களுக்கு எதிராகவும் பாதுகாப்புப் படையினர் மாற்றுகின்றனர். அவர்கள் மக்களை நிம்மதியாக, சுதந்திரமாக வாழ அனுமதிக்க மாட்டார்கள்". என்கிறார், அப்சலின் மனைவி தபஸ்ஸும்.

இந்த பரிதாபகரமான கதைகளைத் தோண்டித் துருவினால், இந்திய ஆளும் கும்பல் - அதிகார வர்க்கம் அனைத்தையும், ஏன் தாங்களே கூட குற்றவாளிக் கூண்டில் ஏற வேண்டியிருக்கும் என்பது உச்சநீதி மன்ற நீதிபதிகளுக்குத் தெரியும்; சதாம் ஹுசைனைத் தூக்கில் போடக் கூடாது என ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் போலி கம்யூனிஸ்டுகள், அப்சல் பிரச்சினையில் வாயை மூடிக் கொள்கிறார்களே, அந்த மௌனத்திற்கும் இந்தக் கதை தெரியும்.

நாஜிகளின் ஆட்சியின் பொழுது, ஜெர்மன் நாடாளுமன்றத்திற்கு அவர்களே தீ வைத்துவிட்டு, பழியை கம்யூனிஸ்டுகள் மீது போட்டார்கள். இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் பற்றி பாரபட்சமற்ற, நேர்மையான விசாரணை நடக்குமானால், இந்திய பாசிச சக்திகளின் சதிகளும் அம்பலத்துக்கு வரலாம்!

இந்தத் தாக்குதல் நடந்து முடிந்த இரண்டொரு நாட்களிலேயே அப்பொழுது ஆட்சியில் இருந்த பா.ஜ.க. கூட்டணி ஆட்சி பொடா சட்டத்தை நிறைவேற்றியது; அதோடுகூட, பாக். மீது படையெடுக்க எல்லைப்புறத்தில் இராணுவம் குவிக்கப்பட்டு, 10,000 கோடி ரூபாய் புஸ்வாணமாக்கப்பட்டது. இவை இரண்டையும் நிறைவேற்ற நாடாளுமன்றத் தாக்குதல் காரணமாக அமைந்ததா, இல்லை, இவை இரண்டையும் நிறைவேற்றுவதற்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற உண்மைகூட வெளிச்சத்துக்கு வரலாம்!

• குப்பன்

# கருணையினால் அல்ல...

மரண தண்டனையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்; ஒழிக்கவே கூடாது என்ற எதிரும் புதிருமான கருத்து, மோதல்களை அப்சலின் வழக்கு, மீண்டும் முன்னணிக்குக் கொண்டு வந்து விட்டது. அப்சல் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக விசாரிக்கப்படாததாலும்; இதுவொரு அரசியல் ரீதியான வழக்காக இருப்பதாலும், இவ்வழக்கை காட்டி, மரண தண்டனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பலமாக முன்வைப்பது எளிதாக இருக்கிறது.

அப்சலுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடாது எனக் கோரும் அறிவு ஜீவிகளும்; குட்டி முதலாளித்துவ சக்திகளும் (தமிழகத்தில் தலித் முரசு, அ.மார்க்ஸ், எஸ்.வி. ராஜதுரை போன்றோர்) அப்சலுக்கு மட்டுமல்ல; ஸ்டெயின்ஸ் பாதிரியாரை எரித்துக் கொன்ற இந்து மதவெறியன் தாராசிங்; குஜராத்தில் பெஸ்ட் பேக்கரி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டோர்; தன்னுடன் படித்த சக மாணவி பிரியங்கா மட்டூவைப் பாலியல் பலாத்காரம் செய்து, பின் படுகொலை செய்த சந்தோஷ் சிங்; விடுதி பணிப்பெண் ஜெஸிகா லாலை பணக்காரத் திமிரில் படுகொலை செய்த மனு சர்மா உள்ளிட்டு யாருக்குமே மரண தண்டனை வழங்கக்கூடாது எனக் கோருகின்றனர்.

பதினான்கு வயது பள்ளி மாணவியை பாலியல் பலாத்காரப்படுத்திக் கொலை செய்த தனஞ்செய் சட்டர்ஜிக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் மனிதத் தன்மையற்றப் படுகொலை எனக் குறிப்பிடுகிறது, தலித் முரசு. (நவ. 2006)

"மரண தண்டனையால் குற்றங்கள் குறைந்து விடாது; தவறு செய்தவனைத் திருத்துவதாகத்தான் தண்டனை அமைய வேண்டும்; தண்டனை பழிக்குப் பழியாக, கொலைக்குக் கொலையாக அமைந்துவிடக் கூடாது" என இவர்கள் மரண தண்டனை ஒழிப்புக்குக் காரணங்களை அடுக்குகிறார்கள்.

இந்து மதவெறியர்கள் யாரும் உணர்ச்சிவசப்பட்டு, சிறுபான்மை சமூகத்தினர் மீது கொலை, பாலியல் வன்புணர்ச்சி, சொத்துக்களைச் சூறையாடுவது ஆகிய கிரிமினல் குற்றங்களை நடத்துவதில்லை. மாறாக, நன்கு திட்டமிட்டு, அரசியல் அதிகார பலத்தோடு, இந்துமதவெறி பாசிச அரசியலை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் முசுலீம்கள் மீது இனவெறிப் படுகொலை நடவடிக்கைகளை ஏவி விடுகிறார்கள்.

"சனநாயக" சமூகத்தை, இந்து மத வெறி பிடித்த பாசிச சமூகமாக மாற்றியமைப்பதன் மூலம், சிறுபான்மையினருக்கு எதிராக மட்டுமல்ல, அனைத்துச் சாதி-மதங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு எதிராகவும் ஒரு போரையே நடத்தி வருகிறார்கள். அத்வானி, மோடி, வாஜ்பாயி போன்ற இப்பாசிச சக்திகளுக்கு - அவர்களின் மேல் சாதிவெறி; ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை அடகு வைக்கும் அவர்களின் துரோகச் செயல்களுக்காகவும் - மரண தண்டனை அன்றி ஆயுட்கால சிறைத் தண்டனையா தர முடியும்? அப்படியே அவர்களுக்கு மரண தண்டனையைவிடக் குறைவான தண்டனை கொடுப்பதால், அவர்கள் திருந்தி சனநாயகவாதிகளாக மாறிவிடுவார்களா?

இந்தப் பாசிசப் பேர்வழிகளை விடுங்கள். தனக்கு ஒரு கோப்பை மது ஊற்றிக் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக விடுதி பணிப்பெண் ஜெஸிகா லாலைக் கொலை செய்த மனு சர்மா; பிரியங்கா மட்டூவைக் கொலை செய்த சந்தோஷ் சிங் போன்ற கிரிமினல் பேர்வழிகள் கூட, தங்களின் குற்றச் செயல்களுக்காக இதுவரை வருந்தியதாகத் தெரியவில்லை. மாறாக, தங்களின் பணபலம் - அதிகார பலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வழக்கை நீர்த்துப் போகச் செய்யத்தான் முயன்றார்கள்; முயன்று வருகிறார்கள்.

ஜெஸிகா கொலையில் தண்டனை பெற்றுள்ள மனுசர்மாவின் மேல் முறையீட்டு வழக்கில், அக்கிரிமினல் பேர்வழிக்காக வாதாடும் ராம் ஜேத்மலானி, "மது ஊற்றிக் கொடுக்க மறுத்ததற்காக மட்டும் ஜெஸிகா லால் கொலை செய்யப்படவில்லை" என நீதிமன்றத்தில் நாணயமற்ற முறையில் வாதாடியிருக்கிறார். இதனை, எதிர்க்கட்சி வக்கீலின் வாதத் திறமையாக மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது. விடுதி பணிப்பெண் என்றால் அவரை எப்படி வேண்டுமா

www.padippakam.com

னாலும் அவமானப்படுத்தலாம் என்ற பணக்காரத் திமிர்த்தனத்தின், ஆணாதிக்கத்தின் வக்கிர வெளிப்பாடு, இது.

மனுசர்மா போன்ற பணபலமும், அதிகார பலமும் கொண்ட குற்றவாளிகள், மக்கள் விரோத மாஃபியா கும்பல்கள் சிறைக்குள் தங்களின் குற்றச் செயல்களுக்காக வருந்துவதில்லை. மாறாக, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுப்பதன் மூலம், தங்களின் சொகுசு கிரிமினல் வாழ்க்கையை சிறைக்குள்ளும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் என்பதுதான் உண்மை. எனவே, இப்படிப்பட்ட திருந்தாத ஜென்மங்களின் உயிர், மரண தண்டனையின் மூலம் பறிக்கப்படுவதால், சமூகத்திற்கு எந்த நட்டமும் கிடையாது.



**மரண தண்டனை என்பது குற்றவியல் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல; இத்தண்டனையை வெறும் பழிக்குப்பழி எனப் பார்ப்பது, அதனின் பின்னுள்ள வர்க்க அரசியலைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறது.**

தனஞ்செய் சட்டர்ஜிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து எழுதும் ''சமூக நீதித் திங்களிதழ்'' தலித் முரசு, மகாராஷ்டிரா மாநிலம் கயர்லாஞ்சியில் தாழ்த்தப்பட்டோரைக் கற்பழித்தும், கொடூரமாகக் கொலை செய்தும் வெறியாட்டம் போட்டுள்ள ஆதிக்க சாதி மிருகங்களுக்கும் மரண தண்டனை கூடாது என எழுதத் துணியுமா? அப்படி எழுதினால், தாழ்த்தப்பட்ட மக்களே, இவர்களின் முகத்தில் காறி உமிழுவார்கள்.

மரண தண்டனை என்பது குற்றவியல் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல; இத்தண்டனையை வெறும் பழிக்குப்பழி எனப் பார்ப்பது, அதனின் பின்னுள்ள வர்க்க அரசியலைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறது.

நாடாளுமன்றத் தாக்குதலில் அப்சலின் பாத்திரம் வேறு மாதிரியாக இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வோம். நீதிமன்ற விசாரணையும் முறையாக நடந்து அப்சலின் ''குற்றம்'' நிரூபிக்கப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது, மரண தண்டனை ஒழிய வேண்டும் எனக் கோருபவர்களால், அப்சலின் குற்றத்தையும், மரண தண்டனை விதிக்கப் பெற்ற பல்வேறு கிரிமினல்களின் குற்றத்தையும் பிரித்துச் சொல்லத் துணிவார்களா?

இந்திய தேசிய வெறி - இந்து மதவெறி பிடித்த நீதிமன்றங்களால் அப்சல் பழி வாங்கப்பட்டுள்ளார் என்ற பொருளில் மட்டும், அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நாம் ரத்து செய்யக் கோரவில்லை. இந்த நாட்டு மக்களின் மீது மேலிருந்து இந்து மத வெறி பாசிசத்தைத் திணிக்கும் கருவியாகவும், ஏகாதிபத்தியங்களின் ஏவல் நாயாகவும் இந்திய நாடாளுமன்றம் இருப்பதால், அதன் மீதான தாக்குதலை இந்திய இறையாண்மையின் மீதான தாக்குதலாகப் பார்க்க முடியாது என்ற புரட்சிகர அரசியலின் அடிப்படையில் இருந்தும், அப்சலை விடுதலை செய்ய வேண்டும் என்கிறோம். அப்சலுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனை இந்திய அரசின் பாசிசத் தன்மையை எடுத்துக்காட்டுவதாக நாம் கூறுகிறோம். ஆனால், மரண தண்டனை ஒழிப்பு இயக்கத்தினரோ, அப்சலுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இந்திய ஜனநாயகத்தின் மீது விழுந்து விட்ட கறை எனக் கூறுவதன் மூலம் அதன் பாசிசத் தன்மையை மூடி மறைக்கிறார்கள்.

அப்சல் வழக்கில் மட்டுமல்ல, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலும் கூட இந்திய நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குவதில் சட்ட விரோதமாகத்தான் நடந்து கொண்டன. புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் கூட, அவர்களைக் கைவிட்டுவிட்ட அந்த நேரத்திலும், ''இந்தியா நடத்திய ஈழ ஆக்கிரமிப்புப் போரின் எதிர்விளைவுதான் ராஜீவ் கொலை; எனவே, அது போர்க்குற்றவாளிக்கெதிரான நடவடிக்கை'' என்ற அடிப்படையில், நாம் ராஜீவ் கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரினோம்.

ஆனால், மரண தண்டனையை ஒழிக்கக் கோரும் யாரும் இன்று கூட இந்த உண்மையைப் பேச மறுக்கிறார்கள். மாறாக, ''இந்த நால்வருக்காகக் கேட்கவில்லை; மரண தண்டனையே முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றுதான் கோருகிறோம்'' என்ற முதலாளித்துவ மனிதாபிமானத்தின் அடிப்படையில்தான் அக்கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள்.

வர்க்க, சாதி, இன ஒடுக்குமுறை நிலவும் சமுதாயத்தில், அந்த ஒடுக்குமுறைகளின் விளைவாக எந்த நீதிமன்ற விசாரணையும் இன்றி அன்றாடம் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர் பல வடிவங்களில் பறிக்கப்படுகிற சமுதாயத்தில், அவற்றுக்கெதிராகப் போராடும் மக்களுக்கும் மரண தண்டனை விதிக்கும் உரிமையுண்டு. இந்தப் புரட்சிகர அரசியலின் அடிப்படையில் இருந்து தான் மரண தண்டனையை அணுக வேண்டும்; மாறாக, முதலாளித்துவ மனிதாபிமான அடிப்படையில் மரண தண்டனையை அணுகுவது, புரட்சிகர வன்முறையையும் குற்ற நடவடிக்கையாக்கிவிடும். புரட்சிகர அரசியலின் நியாயத்தைத் தூக்கிலிட்டு விடும்.

• மாரி

**அப்சலின் தூக்கு தண்டனையை நீக்கக் கோரி, மரண தண்டனைக்கு எதிரான இயக்கம் சென்னையில் நடத்திய கருத்தரங்கில், கனிமொழி (இடது), முன்னாள் மும்பய் உயர்நீதி மன்ற நீதிபதி ஹெச்.சுரேஷ் (நடுவில்), மற்றும் பத்திரிகையாளர் குல்தீப் நய்யார்.**



# வருகிறது சிறப்புப் பொருளாதார மண்டலம்! இறுகுகிறது மறுகாலனிய சுருக்கு!
## – கருத்தரங்கம், விளக்கக் கூட்டம்

விவசாயிகளின் விளைநிலங்களைப் பறித்து, நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை விரட்டியடிக்க ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பல்வேறு வடிவங்களில் பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

ஓசூரில், நான்கு ஊராட்சிகளை உள்ளடக்கி 3600 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவ வேகமாக ஏற்பாடுகளைச் செய்துவரும் நிலையில், பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து சி.பொ. மண்டலத்தின் காலனியாதிக்கக் கோர முகத்தை விளக்கி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு, கடந்த அக்டோபர் மாதத்தில் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன. போலி கம்யூனிஸ்டுகள் இப்பகுதியில் சிப்காட் வரப்போவதாகப் புளுகி, உள்ளாட்சித் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கி ஆதாயமடைந்த நிலையில், சி.பொ. மண்டலத்தால் ஏற்படும் கோரமான விளைவுகளை விளக்கித் தோழர்கள் மேற்கொண்ட பிரச்சார இயக்கம், இப்பகுதிவாழ் மக்களின் பார்வையை விசாலமாக்கியது. சிப்காட் போல சி.பொ. மண்டலமும் ஒரு புதிய தொழிற்பேட்டை என்றும், புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று எண்ணியிருந்த விவசாயிகள், உண்மை நிலை அறிந்து தமது குமுறலை வெளிப்படுத்தினர்.

இப்பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியாக, கடந்த அக்டோபர் 29-ஆம் தேதியன்று ஓசூரை அடுத்துள்ள அக்கொண்டபள்ளி கிராமத்தில், அங்கு வரவிருக்கும் சி.பொ. மண்டலத்தை எதிர்த்து இவ்வமைப்புகள் கருத்தரங்கை நடத்தின. நக்சல்பாரி தீவிரவாதிகள் நடத்தும் கூட்டத்திற்குப் போகாதீர்கள்; விபரீத விளைவுகள் ஏற்படும் என்று போலீசும் ரியல் எஸ்டேட் அதிபர்களும் நிலத்தரகர்களும் பீதியூட்டும் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்ட போதிலும், அதையும் மீறி நூற்றுக்கணக்கான மக்கள் இக்கருத்தரங்கிற்குத் திரண்டு வந்தனர்.

''நாட்டை மீண்டும் அடிமையாக்க வரும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை விரட்டியடிப்போம்!'' என்ற தலைப்பில், அக்கொண்டபள்ளி கிராமக் கோயில் வளாகத்தில் நடந்த இக்கருத்தரங்கில், பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப. தங்கராசு, சி.பொ. மண்டலத் திட்டத்தை எதிர்த்து கடந்த ஈராண்டுகளாக விவசாயிகளைத் திரட்டிப் போராடிவரும் முன்னாள் ஊராட்சித் தலைவர் திரு. சத்திய நாராயணன் ஆகியோரும் முன்னணித் தோழர்களும் சிறப்புரையாற்றினர்.




திருச்சியில், 19.11.06 அன்று உறையூரில் சி.பொ. மண்டலத்தின் பின்னே பொதிந்துள்ள காலனியாதிக்கச் சதியைத் தோலுரித்துக் காட்டும் அரங்கக் கூட்டம் நடைபெற்றது. இதையொட்டி துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், தட்டிகள் மூலம் விரிவாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு, நூற்றுக்கணக்கில் பார்வையாளர்கள் இந்நிகழ்ச்சிக்குத் திரண்டு வந்தனர். பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப. தங்கராசு, இலால்குடி வட்ட வி.வி.மு. தோழர் இரவி ஆகியோர் தமது சிறப்புரையில் சி.பொ. மண்டலத்தால் விளையும் பேரழிவுகளையும் துரோகிகளின் பித்தலாட்டத்தையும் விரிவாக விளக்கினர்.

– பு.ஜ. செய்தியாளர்கள்

## “சதாமுக்குத் தூக்கு தண்டனை என்றால், 6 இலட்சம் ஈராக் மக்களைக் கொன்றொழித்த பயங்கரவாத புஷ்ஷுக்கு என்ன தண்டனை?”
## – கண்டன ஆர்ப்பாட்டம்

ஈராக்கில், நீதி விசாரணை நாடகமாடி சதாமுக்குத் தூக்கு தண்டனை விதித்துள்ள அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து விழுப்புரம்-கடலூர் மாவட்ட வி.வி.மு., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., அமைப்புகள் இணைந்து 16.11.06 அன்று விழுப்புரத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ''சதாமுக்குத் தூக்கு தண்டனை என்றால், 6 இலட்சம் ஈராக் மக்களைக் கொன்றொழித்த பயங்கரவாத புஷ்ஷுக்கு என்ன தண்டனை?'' என்ற மைய முழக்கத்துடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் ஏழுமலை (வி.வி.மு) தலைமை தாங்கினார். உலக மேலாதிக்கப் பயங்கரவாத அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர்கள், கொலைகள், சதிகளைப் பட்டியலிட்டும், உலகப் பொது எதிரி அமெரிக்காவுக்கு எதிராக உலகெங்கும் போராட்டங்கள் தொடர்வதை விளக்கியும், அமெரிக்காவின் கைக்கூலியாகச் செயல்படும் இந்திய ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தியும் முன்னணித் தோழர்கள் கண்டன உரையாற்றினர். கொலைகார புஷ்ஷின் கொடூரத்தைச் சித்தரிக்கும் படங்களைக் கொண்ட தட்டிகளோடும் நகரை அதிரவைத்த முழக்கங்களோடும் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், உலக மேலாதிக்கப் பயங்கரவாதி புஷ்ஷுக்கு இப்புரட்சிகர அமைப்புகள் மரண தண்டனை விதிப்பதாகத் தீர்ப்பெழுதிப் பிரகடனப்படுத்தின. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை அம்பலப்படுத்தி முறியடிக்க அறைகூவிய இந்த ஆர்ப்பாட்டத்தை திரளான உழைக்கும் மக்கள் உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித்தனர். பென்னாகரம், சென்னை மற்றும் பிற பகுதிகளில் சதாமுக்குத் தூக்கு தண்டனை விதிக்கும் அமெரிக்க மேலாதிக்க வல்லரசை அம்பலப்படுத்தியும், பயங்கரவாத அமெரிக்க வல்லரசை முறியடிக்க அறைகூவியும் பரவலாக சுவரொட்டிகள், முழக்க தட்டிகள் மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

*— பு.ஜ. செய்தியாளர்கள்*

www.padippakam.com

## புவி வெப்ப நிலை உயர்வு:

# ஏகாதிபத்திய இலாப வெறியின் கொடூரம்! பேரழிவின் விளிம்பில் பூவுலகம்!

பேரழிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது உலகம். வட துருவத்திலும் தென் துருவத்திலும் உள்ள நிரந்தரப் பனிப்பாளங்கள் உருகத் தொடங்கி, கடலை நோக்கி வேகமாக ஓடுகின்றன. கடலுக்குள் விழும் பனியாறுகளின் பருமம் தொடர்ந்து அதிகரித்து, கடல் மட்டம் வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால், இந்தியாவின் தென்மேற்கே உள்ள மாலத் தீவுகளும் இன்னும் பல சிறிய தீவுகளும் கடலில் மூழ்கி அழிந்து போகும். வளி மண்டல வெப்பநிலை உயர்வால், வறட்சியும் வெள்ளமும் அடுத்தடுத்து நிகழும்; காடுகள் பற்றி யெரியும், பூமத்திய ரேகைப் பகுதியில் கடல் கொதித்து ஆவியாகிக் கொண்டிருக்கும்; கடலிலிருந்து பல்லாயிரம் கோடி டன் அளவுக்கு கரிம வாயுக்கள் பொங்கி வெளிப்பட்டு, வளிமண்டலம் எங்கும் புகைமயமாகும்; பல கோடி உயிரிச் சிற்றினங்கள் முற்றாக அழிந்து போகும்.

''உலக அழிவு சமீபித்து விட்டது; ஏசு வரப் போகிறார்'' என்று கிறித்துவ மதபோதகர்கள் செய்து வரும் பிரச்சார மல்ல இது. சுற்றுச்சூழல் அறிவியலாளர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை! மீள முடியாத வரம்புகளைத் தாண்டி உலகின் வளி மண்டலமும் சுற்றுச் சூழலும் சென்று விட்டது; தொடர்ந்து இதே நிலை நீடித்தால், இன்னும் பத்தே ஆண்டுகளில் உலகம் பேரழிவைச் சந்திக்கும் என்று அறுதியிடுகிறார்கள், அறிவியலாளர்கள்.

பூவுலகின் வட துருவத்திலும், தென்துருவத்திலும் 2 முதல் 3 கிலோ மீட்டர் வரை தடிமனுள்ள நிரந்தரப் பனிப்பாளங்கள் உள்ளன. உலகளாவிய வெப்பநிலை உயர்வால் இவை உருக பத்தாயிரம் ஆண்டுகளாவது ஆகும் என்று அறிவியலாளர்கள் மதிப்பிட்டார்கள். ஆனால் உலகளாவிய வெப்பநிலை தாறுமாறாக உயர்ந்து, துருவப் பகுதிகளில் நிரந்தரப் பனிப்பாளங்களில் விரிசல்கள் ஏற்பட்டு, மேல்பரப்பில் உருகும் நீர் விரிசல்களில் இறங்கி, பனிப்பாளங்களுக்கு அடியில் உள்ள தரைப்பரப்பை எளிதில் எட்டி விடுகின்றன. பனிப்பாளம் தரையை விட்டு நீரில் மிதக்கத் தொடங்கி வேகமாக கடலை நோக்கி நகர ஆரம்பித்து விடுகிறது. இப்படி, வட துருவத்தை ஒட்டியுள்ள கிரீன்லாந்து, சைபீரியா ஆகியவற்றிலிருந்து பனியாறுகள் வேகமாக உருகிக் கடலில் கலப்பது அதிகரித்து வருகிறது.

எரிக் ரிக்நோட் மற்றும் பன்னீர் கன கரத்தினம் ஆகிய ஆய்வாளர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த ஓராண்டில் மட்டும் கிரீன்லாந்திலிருந்து 224 கன கிலோ மீட்டர் பருமம் அளவுக்கு பனி உருகி அட்லாண்டிக் கடலில் கலந்துள்ளது. 1996-இல் இது ஏறத்தாழ 100 கன கிலோமீட்டர் பருமம் என்பதாக இருந்தது. கிரீன்லாந்தின் வடபகுதியிலுள்ள பனி உருகிவிட்டால் கடல் மட்டம் மேலும் 23 அடிக்கு உயரும். தெற்கேயுள்ள அண்டார்டிகாவின் பனி உருகிவிட்டால் உலகின் கடல் மட்டம் மேலும் 215 அடிக்கு உயர்ந்துவிடும். கடந்த ஓராண்டில் மட்டும் கடல்மட்டம் 4 முதல் 8 அங்குல அளவுக்கு உயர்ந்து பசிபிக் தீவுகளில் உள்ள பல சிறிய திட்டுகள் நீரில் மூழ்கிவிட்டன.

கனடாவின் வடக்கு கியூபெக் மாநிலத்தின் நுனாவிக் வட்டத்து மக்கள், இவ்வட்டாரத்தில் அடிக்கடி பனிப்புயல் - சூறாவளிகள் திடீரென நிகழ்ந்து பெரும் விபத்துக்களால் பலர் மாண்டு போயுள்ளதாகக் குமுறுகிறார்கள். இத்துருவப் பகுதியில் கடந்த ஆண்டில் 100 டிகிரி அளவுக்கு வெய்யிலும் இடியுடன் புயலும் வீசியது. இப்பகுதிவாழ் மக்கள் இதுவரை கண்டிராத புதியவகை பறவைகளும் விலங்குகளும் அங்கு குடியேறின. புதிய வகை தாவரங்கள் முளைத்தன. துருவக் கரடிகள், வேட்டைக்கு ஒன்றும் கிடைக்காமல் மனிதக் குடியிருப்புகளை அடிக்கடி முற்றுகையிடுகின்றன. கம்பளி ஆடை அணியும் இம்மக்கள், குளிர்காலத்தில்கூட சூரிய ஒளி தடுப்பு களிம்பை உடலில் பூசிக் கொள்ளுமளவுக்கு வெப்பம் அங்கு வாட்டுகிறது. அவர்களில் பலருக்குத் தோல்வெடிப்பும் கொப்புளங்களும் தோன்றியுள்ளன.

கிரீன்லாந்தின் எஸ்கிமோக்கள் ''இக்லூ'' எனப்படும் தமது கொப்பரை வடிவிலான பனி வீடுகள் வெப்பநிலை அதிகரிப்பால் நொறுங்கி விடுவதாகவும், இதனால் தாங்கள் புலம்பெயர நேர்ந்துள்ளதாகவும் வேதனையுடன் குறிப்பிடுகிறார்கள். ''21-ஆம் நூற்றாண்டின் தட்ப வெப்பநிலை முறைகுலைவுப் பேரழிவுக்குப் பலியாகும் முதலாவது மனித சமூகம் நாங்கள்தான். எங்களது தொன்மை வாய்ந்த வாழ்க்கை முறையும் பண்பாட்டு அடையாளங்களும் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளது'' என்று விம்முகிறார்கள், எஸ்கிமோக்கள்.

வட,தென் துருவங்களிலுள்ள பனிப்படலங்கள் தம்மீது விழும் சூரிய வெப்பத்தில் 80 சதவீதம் வரை வானில் திருப்பிய னுப்புகின்றன. கடல்நீர் 7 சதவீத

புவி வெப்பநிலை அதிகரிப்பால் அழியும் அபாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ள துருவ பனிக்கரடிகள்.





படிப்பகம்

www.padippakam.com


வெப்பத்தை மட்டுமே பிரதிபலிக்கிறது. பனிப்படலங்களின் பரப்பு குறைவதாலும், கடல்களின் பரப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாலும் இப்படித் திருப்பியனுப்பப்படும் வெப்பம் குறைந்து, உலகளாவிய வெப்பநிலை அதிகரித்து வருகிறது. துருவப் பகுதிகளின் நிரந்தர பனிப்பாளங்களில் பல கோடி டன் அளவுக்குக் கரிமவாயுக்கள் புதைந்துள்ளன. கரியமில வாயு, மீதேன், நைட்ரஸ் ஆக்சைடு, கந்தக டை ஆக்சைடு, குளோரோ ப்ளோரா கார்பன் முதலான கரிம வாயுக்கள், பசுமைக் குடில் வாயுக்கள் (green house gases) என்றழைக்கப்படுகின்றன. பனிப்பாளங்கள் உருகினால் அவற்றிலிருந்து ஏராளமான பசுமைக்குடில் வாயுக்கள் வெளிப்பட்டு பூமியின் வெப்பநிலை மேலும் அதிகரிக்கும். உலகளாவிய வெப்பநிலை மேலும் 3 செல்சியஸ் டிகிரி உயர்ந்தால், உலகிலுள்ள காடுகள் அழிந்து சிதைந்து கரிம வாயுக்களை வெளியிடத் தொடங்கிவிடும். அத்தகைய நிலைமை ஏற்பட்டால், 100 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி எப்படி இருந்ததோ, இன்று வெள்ளிக்கிரகம் எப்படி இருக்கிறதோ, அப்படி எங்கும் வெப்பமும் புகை மண்டலும் நீராவியுமாகவே இருக்கும். மனித இனம் உயிர்வாழ்வதைப் பற்றி கற்பனை செய்யக் கூட முடியாது.

மேலாதிக்க வல்லரசுகளின் ஆக்கிரமிப்புப் போர்கள், அரசு பயங்கரவாதம், உலக வர்த்தகக் கழகத்தின் கெடுபிடிகள், பசி - பஞ்சம் - பட்டினிச்சாவுகள் - இவை எல்லாவற்றையும் விஞ்சும் வண்ணம் புவியின் வெப்பநிலை அதிகரிப்பு எனும் பேரபாயம் இன்று உலகைக் கவ்வியுள்ளது. புவியின் வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணம் என்ன?

இது பல நூறு ஆண்டுகளுக்கொரு முறை நிகழும் இயற்கையின் பெருஞ் சீற்றமல்ல. தொழிற்புரட்சி தொடங்கிய காலத்திலிருந்து, கரியும் எண்ணெயும் எரிக்கப்பட்டு அவை வளிமண்டலத்தில் கரிம வாயுக்களைப் பரப்பத் தொடங்கி விட்டன. உலகம் மேலும் மேலும் தொழில்மயமாகி ஆலைகளும் வாகனங்களும் பெருகுவதன் விளைவாக, அவை வெளியேற்றும் கரிம வாயுக்களால் உலகம் மேலும் மேலும் வெப்பமடைந்து கொண்டே போகிறது. சூரியனிடமிருந்து வெளிப்படும் கடுமையான வெப்பத்தையும், புற ஊதாக் கதிர்களையும் பூமியைத் தாக்காமல் தடுத்து, பூமியின் மேல் குடைபோலச் சூழ்ந்துள்ள ஓசோன் வாயு மண்டலமே, கரிம வாயுக்களின் பெருக்கத்தால் ஓட்டையாகி விட்டது.

உலக மக்கட் தொகையில் 4.73 சதவீதத்தைக் கொண்ட அமெரிக்க வல்லரசு, உலகளாவிய அளவில் 26 சதவீத கார்பன்-டை-ஆக்சைடையும் 20 சதவீத மீதேன் வாயுவையும் நச்சுக் கழிவாக வெளியேற்றி முதலிடம் வகிக்கிறது. பிற ஐரோப்பிய நாடுகளும் ரசியாவும் அதற்கடுத்த நிலையில் உள்ளன. உலக மக்கட் தொகையில் 24 சதவீதத்தைக் கொண்ட தொழில் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகள் ஏறத்தாழ 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட உற்பத்திப் பொருட்களைப் பாவிக்கின்றன. மொத்த எரிசக்தியில் முக்கால் பங்கை விழுங்கும் இந்நாடுகளிலிருந்துதான் 75 சதவீத கார்பன்-டை-ஆக்சைடு வெளியாகிறது. அதேசமயம், ஏழை நாடுகள் கரிம வாயுக்களை வெளியேற்றுவதில் கடைசி வரிசையில் தான் இருக்கின்றன.

இது தவிர, பின்விளைவுகளைப் பற்றி ஆராயாமல் இலாபவெறியோடும் போர்வெறியோடும் ஏகாதிபத்திய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும்



''கங்கையைக் கொல்லும் புவி வெப்ப அதிகரிப்பு'' என்ற வாசகத்துடன் கூடிய பைகளை முதுகில் கட்டிக் கொண்டு, கங்கை உற்பத்தியாகும் கங்கோத்ரி பனிச் சிகரத்தில், பசுமை அமைதி இயக்கத்தினர் நடத்திய கவனாரப்புப் போராட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

பலவித பொருட்களாலும் அவற்றின் கழிவுகளாலும் சுற்றுச் சூழலும் புவியின் உயிரியல் சூழலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, அணு உலைக் கழிவுகளையும் சில இரசாயனக் கழிவுகளையும் அவற்றின் நச்சுத்தன்மையைப் போக்கி முற்றாக அழித்து விட முடியாது. இக்கழிவுகளின் நச்சுத்தன்மையைப் போக்க கோடிக்கணக்கில் செலவிட வேண்டியிருப்பதால், பல ஏகாதிபத்திய நிறுவனங்கள் அவற்றை இரகசியமாகக் கடலில் கொட்டி வருகின்றன. இத்தகைய நச்சுக் கழிவுகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் பின்தொடர்ந்து சென்று இக்கொடுஞ்செயலை உலகுக்கு அம்பலப்படுத்தியதற்காக, பசுமை அமைதி இயக்கத்தினரின் படகுகள் மீதே குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்துமளவுக்கு ஏகாதிபத்திய மாஃபியா கும்பல்களின் அட்டூழியம் பெருகிவிட்டது.

சுருக்கமாகச் சொன்னால், புவி வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான பசுமைக் குடில் வாயுக்களைப் பெருமளவில் வெளியேற்றி, பேரழிவை விளைவித்துக் கொண்டிருப்பவை ஏகாதிபத்திய நாடுகள்தான். இந்நாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பில் ஒரு சதவீதத்தை ஒதுக்கினால், 2050-க்குள் கரியமில வாயுப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்கிறார் உலகவங்கியின் முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணரான நிக்கோலஸ் ஸ்டெர்ன்.

ஆனால், உலகமே அழிந்தாலும் பரவாயில்லை; எங்களது இலாப விகிதத்தை கால் சதவீதம் கூட குறைத்துக் கொள்ள மாட்டோம் என்கிறார்கள் ஏகாதிபத்தியவாதிகள். 1992-இல் ஐ.நா மன்றத்தின் தட்ப-வெப்ப நிலை மாற்றம் பற்றிய மாநாடு தொடங்கி, பிரேசில் நாட்டின் தலைநகரான ரியோடி ஜெனிரோவில் நடந்த சுற்றுச்சூழல் - உயிரியல் பாதுகாப்பு மாநாடு, 1997-இல் ஜப்பானின் கியோட்டோ நகரில் நடந்த மாநாடு, 2000-வது ஆண்டில் நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் நடந்த உயர்மட்ட பேச்சுவார்த்தைகள், அதைத் தொடர்ந்து கருத்தரங்குகள், கடந்த அக்டோபர் மாதத்தில் கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் நடந்த கூட்டம் என புவி வெப்பநிலை அதிகரிப்பைத் தடுக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் பலமுறை பல மாநாடுகள் நடந்துள்ள போதிலும், அவை வெங்காயத் தோலை உரித்த கதையாகவே முடிந்துள்ளன. 2012-ஆம் ஆண்டுக்குள் பசுமைக் குடில் வாயுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதாக 141 நாடுகள் கையெழுத்திட்டுள்ளனவே தவிர, அதற்கான நிபந்தனையோ நிர்ப்பந்தமோ கிடையாது.



**பசுமைக் குடில் வாயுக்களைப் பெருமளவில் வெளியேற்றி, பேரழிவை விளைவித்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியங்கள், உலகமே அழிந்தாலும் பரவாயில்லை; எங்களது இலாப விகிதத்தை கால் சதவீதம் கூட குறைத்துக் கொள்ள மாட்டோம் என்று கொக்கரிக்கின்றன.**

சுற்றுச்சூழல் பாதிப்பினால் நஞ்சாகிப் போயுள்ள உலகைச் சீரமைக்க ஏகாதிபத்திய நாடுகளை நிதி ஒதுக்கீடு செய்யக்கோரும் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ள போதிலும், பல நாடுகள் மிக அற்பமான நிதியையே ஒதுக்கியுள்ளன. ஏகாதிபத்தியங்கள் ஒதுக்கீடு செய்யும் நிதியை ஐ.நா. மன்றத்தின் மூலம் உலகவங்கி கட்டுப்படுத்தி நிர்வகிப்பதால், உலக வங்கியின் கட்டளைக் கேற்ப ஏகாதிபத்திய கொள்ளைக்கு கதவை அகலத் திறக்கும் ஏழை நாடுகளுக்கு மட்டுமே அந்த நிதி கிடைக்கும். அதுவும் ரொக்கமாக அல்லாமல், காடு வளர்ப்புத் திட்டம், அரிய வகை விலங்கினப் பாதுகாப்புத் திட்டம் முதலான ஏகாதிபத்திய நலனுக்கேற்ற திட்டங்களாகவே செயல்படுத்தப்படுகின்றன.

பசுமைக் குடில் வாயுக்களை பெருமளவில் வெளியேற்றும் முதன்மைக் குற்றவாளிகளான ஏகாதிபத்திய நாடுகள், இப்போது தொழில் வளர்ச்சியடைந்து வரும் ஏழை நாடுகளுக்கும் இதில் பங்கு உள்ளது என்று கூறி அந்நாடுகள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்க நிர்பந்தித்து வருகின்றன. ஏழை நாடுகளில் நெல் பயிரிடுவதாலும் கால்நடைகளின் சாணத்தாலும் மீதேன் வாயு பெருகுவதாகவும், ஏழை நாடுகளில் அதிகமாக விறகு அடுப்பு எரிப்பதால் வளிமண்டலத்தில் கரியமில வாயு பெருகுவதாகவும் ஏகாதிபத்திய நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. சீனா, இந்தியா போன்ற நாடுகள், பசுமைக் குடில் வாயுக்களை வெளியேற்றுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்று எச்சரிக்கின்றன.

"நீ மட்டும் யோக்கியமா?" என்று ஏழை நாடுகள் மீது குற்றம் சாட்டி தப்பித்துக் கொள்ளும் உத்திதான் இது. இந்தியா போன்ற ஏழை நாடுகள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்காவிடில், கியோட்டோ ஒப்பந்தத்தைச் செயல்படுத்த மாட்டோம் என்று கொக்கரிக்கிறது அமெரிக்கா. கியோட்டோ ஒப்பந்தத்தைச் செயல்படுத்தி பசுமைக்குடில் வாயுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பல்லாயிரம் கோடிகள் செலவாகி, பொருளாதார பாதிப்புகள் ஏற்படும் என்று வாதிடும் அமெரிக்கா, தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்தப் போவதாகக் கூறுகிறது. ஆனால் இதற்கான இலக்கோ, காலவரையறையோ, கட்டுப்பாடோ கிடையாது.

புவி வெப்பநிலை அதிகரிப்புக்கும் சுற்றுச் சூழல் நஞ்சாவதற்கும் ஏகாதிபத்திய இலாபவெறியும் போர்வெறியுமே முதன்மையான காரணம். ஏகாதிபத்திய உற்பத்தி முறையை ஒழித்துக் கட்டாமல், காடு வளர்ப்புக்கும் மாசு கட்டுப்பாட்டுக்கும் கூடுதல் நிதி ஒதுக்குவதன் மூலம் புவி வெப்பநிலை அதிகரிப்பையும் பேரழிவுகளையும் தடுத்து நிறுத்திட முடியாது. ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான சுயசார்பான தேசிய உற்பத்தியை, இலாபவெறியற்ற மக்கள் நலன் சார்ந்த சோசலிச உற்பத்தி முறையை நிறுவி வளர்க்காதவரை, ஏழை நாடுகள் மீது ஏகாதிபத்திய நரிகள் போடும் பழியையோ, புவி வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்படும் பேரழிவுகளையோ ஒரு போதும் தடுத்து நிறுத்திட முடியாது.

பேரழிவின் விளிம்பில் நிற்கும் பூவுலகம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது.

● மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

# அதிகாரிகளின் அடாவடித்தனம்! மீனவர் வாழ்வுரிமை பறிப்பு!

பன்னாட்டு ஏகபோக மீன்பிடி முதலாளிகளுக்கு நமது கடல்வளங்களைத் தாரை வார்க்கும் தனியார்மய - தாராளமயக் கொள்கைப்படி, சென்னை - மெரீனா கடற்கரைப் பகுதியிலிருந்து மீனவர்கள் விரட்டப்பட்டார்கள்; இப்போது முத்துப்பேட்டை வட்டாரத்தில், மீனவர்கள் காட்டுப் பகுதி வழியே மீன் பிடிக்கச் செல்லத் தடைவிதித்து, கடலோர வனத்துறை அதிகாரிகள் மீனவர்களின் வாழ்வுரிமையைப் பறித்து வருகிறார்கள்.

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் தொடங்கி கோடியக்கரை வரை உள்ள கடல் பகுதியானது, சேற்றுக் கடல் என்றழைக்கப்படுகிறது. காவிரி கிளை ஆறுகளின் கழிமுகப் பகுதியான இக்கடற்கரை, ஆற்று வெள்ளத்தில் அடித்து வரப்படும் வண்டல் மண் படிந்து சேறு நிறைந்த காட்டுப் பகுதியாகும். இங்கு அலையாத்தி, தில்லை, கன்னா, உமரி போன்ற மரங்களும் புதர்களும் செழித்து வளர்ந்து, கடலோர மக்களை புயல்-சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றும் அரணாக உள்ளது. இவ்வட்டாரத்திலுள்ள ஆயிரக்கணக்கான மீனவர்கள், சேறும் நீரும் சூழ்ந்த கடலோரக் காடுகளின் வழியே இடுப்பளவு சேற்றில் சிரமப்பட்டு நடந்து சென்று தலைமுறை தலைமுறையாக மீன் பிடித்து வருகிறார்கள்.

காடுகளின் அழிவுக்கு வழிகோலிய வனத்துறை அதிகாரிகள், இப்போது அலையாத்தி காடுகள் வளர்ப்புத்திட்டம் என்ற பெயரில் மீனவர்கள் கடலுக்குச் சென்று வரும் கடலோரப் பகுதியை ஆக்கிரமித்து, பத்தடிக்கு ஒரு வாய்க்கால் வீதம் குழியாக வெட்டி, இருபுறமும் கரை ஏற்படுத்தி, அலையாத்தி கன்றுகளைச் செயற்கையாக நட்டு வைத்துள்ளனர். மேற்கூறிய வாய்க்கால்களில் ஏறி இறங்கித்தான் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டியுள்ளது. இதனால், ஊன்றப்பட்டுள்ள அலையாத்திக் கன்றுகள் மிதிபட்டு அழிவதாக பொய்க் காரணம் காட்டி, மீனவர்கள் இக்காட்டுப் பகுதி வழியே மீன்பிடிக்கச் செல்ல விடாமல் வனத்துறையினர் தடுத்து அடாவடி செய்கின்றனர். மீறிச் செல்லும் மீனவர்களைப் பிடித்துச் சென்று ஒருநாள் முழுவதும் உட்கார வைத்து பிழைப்பைக் கெடுத்து விரட்டுவது; அவர்களின் மீன்வலை, பானை முதலானவற்றையும் பிடித்து வைத்துள்ள மீன், கையிலிருக்கும் பணம் ஆகியவற்றையும் பிடுங்கிக் கொள்வது; வழக்குப் போடுவதாக மிரட்டி பணம் பறிப்பது என்பதாக வனத்துறையின் அட்டூழியம் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. இதனால் பரம்பரையாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த இப்பகுதிவாழ் மீனவர்கள் வாழ்விழந்து போகும் நிலையில் தத்தளிக்கின்றனர்.

அதிகார வர்க்கத்துக்கு காடு வளர்ப்பில் உண்மையான அக்கறை இருந்தால், மீனவர்கள் கடலுக்குச் சென்றுவர வழியை ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனால், நமது கடல்வளங்களைப் பன்னாட்டு மீன்பிடி முதலாளிகளுக்குத் தாரை வார்த்து கடற்கரையிலிருந்து மீனவர்களை வெளியேற்றும் ஏகாதிபத்திய சதித் திட்டத்தின்படியே ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் செயல்படுகின்றனர் என்பதற்கு முத்துப்பேட்டை இன்னுமொரு சாட்சியமாக உள்ளது.

மீனவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்தனியார்மய - தாராளமயச் சதியை எதிர்த்தும், வனத்துறை அதிகாரிகளின் காட்டுதர்பாரை முறியடிக்க புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள மீனவர்களை அறைகூவியும் இப்பகுதியெங்கும் பிரச்சாரம் செய்த வி.வி.மு., அதன் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட மீனவர்களைத் திரட்டி, 20.11.06 அன்று மாலை முத்துப்பேட்டை புதிய பேருந்து நிலையம் அருகே, வனச்சரக அலுவலகம் முன்பாக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பட்டுக்கோட்டை வட்ட வி.வி.மு. செயலர் தோழர் மாரிமுத்து தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், முன்னணித் தோழர்களும் ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பனும் கண்டன உரையாற்றினர். விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், மீனவர்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் புதிய நம்பிக்கையை அளித்துள்ளது.

**– விவசாயிகள் விடுதலை முன்னணி, பட்டுக்கோட்டை வட்டம்.**

## சிக் குன் குனியா:
# பு.ஜ.தொ.மு.வின் நிவாரணப் பணி - அரசியல் பணி

கோவை மாவட்டம் உடுமலை வட்டத்திலுள்ள புக்குளம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் 'சிக் குன் குனியா'' நோய் தாக்கி பலர் வேதனைப்பட்டு வருகின்றனர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிப் பிரதிநிதிகளிடம் இதுபற்றி முறையிட்டும் அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இப்பகுதியில் இயங்கிவரும் பு.ஜ.தொ.மு., சிக் குன் குனியா நோய் தடுப்பு மற்றும் இலவச சிகிச்சை முகாமை கடந்த 8.11.06 அன்று புக்குளம் கிராமத்தில் நடத்தியது.

கோவை-சூலூரிலுள்ள ஆர்.வி.எஸ். ஹோமியோ மருத்துவமனையுடன் இணைந்து பு.ஜ.தொ.மு. ஏற்பாடு செய்து நடத்திய இச்சிகிச்சை முகாமிற்கு, பஞ்சாயத்து அல்லது பள்ளி வளாகத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூட அனுமதி மறுத்து அதிகார வர்க்கம் இழுத்தடித்தது. ஊர்ப் பொதுக்கோயிலான மாரியம்மன் கோயில் மடத்தில் முகாம் நடத்த இடம் கேட்டபோது, பொறுப்பிலுள்ள ஆதிக்க சாதிக்காரர் அனுமதி தர மறுத்தார். தனித் தொகுதியாக அறிவிக்கப்பட்டு, இக்கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக ஒரு தலித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள போதிலும், ''கண்டவனெல்லாம் கோயிலுக்கு வந்தா, கோயில் தீட்டுப் பட்டுவிடும்'' என்று தீண்டாமையை வெளிப்படையாகவே கக்கினார், சின்னதம்பி என்ற அந்தச் சாதிவெறியர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சித் தலைவர்களுக்கு, இலவச சிகிச்சை முகாம் நடத்த இடம் ஏற்பாடு செய்து தரக் கூட அதிகாரமில்லாத அவலத்தையும், அதிகார வர்க்கத்தின் அலட்சியத்தையும், சாதிவெறியர்களின் திமிர்த்தனத்தையும் மக்களிடம் பிரச்சாரம் செய்த பு.ஜ.தொ.மு., மக்கள் ஆதரவோடு ஒரு வீட்டுத் திண்ணையை ஒட்டி சாலையிலேயே இச்சிகிச்சை முகாமை நடத்தியது. இச்சிகிச்சை முகாம் நிகழ்ச்சியானது, அதிகார வர்க்கம் மற்றும் உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் யோக்கியதையையும் சாதிவெறியர்களின் திமிரையும் உழைக்கும் மக்கள் புரிந்து கொள்ள உதவுவதாக அமைந்தது.

*– புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, உடுமலை வட்டம்.*

www.padippakam.com

### சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

*இந்தியாவின் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் அடுக்கடுக்கான பல சமூக நீதிச் சலுகைகளும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் உரிமைச் சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் எதனால் கொண்டு வரப்படுகின்றன, இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன, இவற்றால் என்னென்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்று அலசும் தொடரின் மூன்றாம் பகுதி.*

முதல் இந்தியப் பிரதமர் ''சாச்சா'' ஜவஹர்லால் நேரு முதல் இப்போதைய இந்திய அரசுத் தலைவர் வரை — இவர்கள் அனைவரும் குழந்தைகளை மிகவும் நேசிப்பவர்கள் என்று அடையாளம் காட்டப்படுகிறார்கள். அவர்கள் எந்தக் குழந்தைகள் மீது நேசம் வைத்தார்கள் என்பது மட்டும் சொல்லப்படவில்லை.

ஆனால், உலகிலேயே மிக அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் இந்தியாவில்தான் இருக்கிறார்கள் என்ற உண்மை அவர்கள் எந்தக் குழந்தைகளை நேசித்தார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டி விடுகிறது. புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றவுடனேயே மாவோவின் செஞ்சீனத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை அடியோடு ஒழிக்கப்பட்டது; பள்ளிக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. ஆனால், காந்தியின் தலைமையில் ''சுதந்திரம்'' பெற்றதாகக் கூறப்படும் இந்த நாட்டில் 59 ஆண்டுகளாகியும், குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றாக ஒழிக்கும் சட்ட நடைமுறையோ இன்னும் வரவே இல்லை.

1933 ஆண்டு ஆங்கிலேயக் காலனிய ஆட்சியாளர்கள் குழந்தைத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்குவதைத் தடை செய்து சட்டம் கொண்டு வந்தார்கள். இப்போது கடந்த 2006, அக்டோபர் 10-ந் தேதி முதல் வீடுகள் மற்றும் விருந்தோம்பல் துறைகளில் (உணவு - தங்கும் விடுதிகள் போன்றவை) குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதைத் தடை செய்து இந்திய அரசு ஆணைப் பிறப்பித்திருக்கிறது. இதற்கிடையே குழந்தைத் தொழிலாளர் முறையை பல தவணைகளில், இனங்களில், வகைகளில் தடை செய்யும் சட்டங்கள் பலவும் வந்திருக்கின்றன; அதேபோன்று பல உச்சநீதி மன்ற உத்திரவுகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இருந்தும் இந்த நாட்டில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அரசுப் பதிவேடுகள் - புள்ளி விவரங்களில்தான் குறைந்திருக்கிறது. இதற்கு மாறாக, வெளியிலே அதிகரித்துக் கொண்டே போகிறது. காரணம் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான அரசின் சட்டங்களும், நடைமுறைகளும் அரைக்கிணறு தாண்டுவதாகவும் ஏனோதானோவென்றுதான் இருந்திருக்கின்றன.

1933-க்குப் பிறகு 1938-ஆம் ஆண்டு குழந்தைகளைப் பணியமர்த்தும் சட்டம் என்றொரு சட்டத்தைக் காலனியவாதிகள் கொண்டு வந்தார்கள். இது குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்யவில்லை. அவர்களை வயதின் அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரித்து ஒரு பகுதியைத் தடைசெய்தும், மற்றொரு பகுதியினருக்கான நடைமுறையை நெறிப்படுத்துவதாக இருந்தது.

1948-ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் சட்டம் 14 வயதுக்குக் குறைவானர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தது. 1951-ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம், 12 வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதற்குத் தடைவிதித்தது. 1951-ஆம் ஆண்டு சரக்குக் கப்பல்கள் சட்டம், 15 வயதுக்குட்பட்டவர்களை பணியமர்த்துவதைத் தடைச் செய்தது. 1952-ஆம் ஆண்டு சுரங்கங்கள் சட்டம் சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதை மட்டுமல்ல; சுரங்கங்களில் சிறுவர்கள் இருப்பதற்கும் தடை விதிக்கிறது.

1961-ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் சிறுவர்களை எந்த வகையிலும் வேலைக்கு வைத்துக் கொள்வதையும் தடை செய்தது. 1961-ஆம் ஆண்டு பயிற்சியாளர்கள் சட்டம் கல்வி மற்றும் உடல் தகுதி கொண்ட 14 வயதுக்கு மேலானவர்களை மட்டுமே தொழில் பயிற்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறது. 1966-ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமை) சட்டம் இந்தத் தொழிலகங்களில் எந்த வேலை





www.padippakam.com



யிலும் குழந்தை உழைப்பைத் தடை செய்கிறது. 1970-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டம், சிலவகைத் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்துவதை நெறிப்படுத்தும் அதேசமயம், மேலும் சிலவற்றில் அதற்குத் தடை விதிக்கிறது. 1976-ஆம் ஆண்டு கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம், கொத்தடிமை முறையில் இருந்து பொதுவில் உழைப்பாளர்களை விடுவிப்பதோடு, அவர்களின் கடன்களையும் ரத்து செய்கிறது; என்றாலும் கொத்தடிமைத்தனத்தில் இருந்து குழந்தைத் தொழிலாளர்களை விடுவிப்பது மற்றும் அவர்களின் மறுவாழ்வு பற்றி எதுவும் கூறவில்லை. 2000-ஆம் ஆண்டு, சிறார்கள் (கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) நீதிச் சட்டம், விடுவிக்கப்பட்ட சிறுவர்களைப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவதை பற்றி மட்டும் பேசுகிறது; வீடு திரும்பிய பிறகு அவர்களின் மறுவாழ்வு குறித்து எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

இப்படி வரிசையாகப் பல சட்டங்கள் குழந்தைத் தொழிலாளர் சம்பந்தமாகப் போடப்பட்டிருந்தாலும் எதுவுமே ஒட்டு மொத்தமாக அதைத் தடை செய்திடவில்லை. 1986-இல் கொண்டு வரப்பட்ட (குழந்தை உழைப்பு தடை மற்றும் நெறிப்படுத்தும்) சட்டம்தான் மிகவும் குறிப்பிடத்தக்கதென்று கூறப்பட்டாலும், இதுவும் கூட சில துறைகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதற்கான வேலை நேரம் மற்றும் வேலை நிலைமைகளை நெறிப்படுத்துவதிலும்; பட்டாசு மற்றும் இரசாயன ஆலைகள் போன்ற ஆபத்து விளைவிக்கக் கூடிய சிலவற்றில் தடை செய்வதைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

ஆக, குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய இந்தச் சட்டங்கள் எல்லாம் மேம்போக்கானவை, பயனற்றவை, ஓட்டைகள் நிறைந்தவை. வேண்டுமென்றேதான் இப்படிச் செய்கிறார்கள். இச்சட்டங்கள் அமலாவதைக் கண்காணிப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 1995 மற்றும் 1996-ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் பல மாநிலங்களில் ஆய்வுகள் மேற்கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம், இந்தச் சட்டங்கள் வழக்கமாக மீறப்படுவதாகவும் அதற்கான குற்றமிழைப்பவர்கள் தண்டனைகள் எதுவுமின்றி தப்பித்துக் கொள்வதாகவும் பல ஆய்வறிக்கைகளில் குற்றம் சாட்டுகிறது.

5 முதல் 14 வயது வரையிலான குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை, அரசின் புள்ளி விவரக் கணக்குப்படியே 1.3 கோடியாகும். இதன்படி, நாடு முழுவதுமுள்ள தொழிலாளர்களில் 3.6 சதவீதமானவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள்; அவர்களில் 85 சதவீதமானவர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். முறைசாராத் தொழில்களில்தான் அதிக எண்



ணிக்கையிலான குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆகவே, அரசுப் புள்ளி விவரம் என்பது வெறும் மோசடிதான். நாட்டின் மொத்த ''தேசிய'' உற்பத்தியில் (ஜி.என்.பி.) குழந்தைத் தொழிலாளர்களின் பங்களிப்பு 20 சதவீதமாகும். இதிலிருந்தே குழந்தைத் தொழிலாளர்கள் ''தேசிய'' உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிப்பதும்; இந்த அரசு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பதில் உண்மையான அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு வைக்கும் பழக்கம் குறிப்பாக, உத்திரப்பிரதேசத்திலும் பீகாரிலும் அதிகரித்திருக்கிறது என்று வேறொரு புள்ளிவிவரம் காட்டுகிறது. 72 சதவீதமான குழந்தைத் தொழிலாளர்கள் உ.பி., ம.பி., மே.வங்கம், ஒரிசா, ஆந்திரா, அசாம், ராஜஸ்தானில் இருக்கிறார்கள். ஆனால் வறுமை - பின்தங்கிய நிலைமை மட்டுமல்ல; மலிவான உழைப்பு என்பதாலும், சமூகக் காரணங்களாலும் கூட குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். குழந்தைத் தொழிலாளர்களில் 40 சதவீதத்தினர் பணக்கார மாநிலங்களாகக் கருதப்படும் மகாராட்டிரம், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகாவில் உள்ளனர்.

குழந்தைத் தொழிலாளர் முறையிலேயே மிகவும் மோசமானது கொத்தடிமைகளாக அவர்களை வைப்பதுதான். கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பே முழுக்கவும் சட்டவிரோதமானதாக்கப்பட்டிருந்த போதும் குழந்தைத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக வைப்பது இன்னமும் நீடிக்கிறது. சில குறிப்பிட்ட தொழில்துறைகள் கொத்தடிமை குழந்தைத் தொழிலாளர்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழில்கள் குழந்தைத் தொழிலாளர்களின் மலிவான உழைப்பைச் சார்ந்துதான் இருக்கின்றன. அதேபோன்று உத்திரப்பிரதேசத்தின் தரைவிரிப்பு மற்றும் வெண்கலத் தொழில்கள், ராஜஸ்தானின் கண்ணாடி வளையல் தொழில், மும்பையின் நகைக் கற்கள் தொழில் ஆகியவை குழந்தைத் தொழிலாளர்களை வைத்துத்தான் இயங்குகின்றன. மேலும் உள்ளாடை - பின்னலாடைத் தொழில்கள், பீடித் தொழில், காபி-தேயிலைத் தோட்டத் தொழில்கள் மற்றும் விவசாயத்தில் கொத்தடிமை குழந்தைத் தொழிலாளர்கள் பெருமளவு உள்ளனர்.

பத்து லட்சம் பேருக்கும் அதிகமான குழந்தை உழைப்பாளர்கள் வீட்டு வேலை செய்யும் வேலையாட்களாக உள்ளனர். மேலும், ஒரு பத்து லட்சம் குழந்தை உழைப்பாளர்கள் சாலையோர உணவகங்கள், ஓட்டல்கள், துரித உணவகங்கள், டீக்கடைகள்,




படிப்பகம்

www.padippakam.com

''ரிசார்ட்கள்'' எனப்படும் விருந்தினர் மாளிகைகளில் வேலை செய்கின்றனர்.



கடனுக்கு ஈடாக கொத்தடிமைகளாக அடகு வைக்கப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் மிகக் கொடூரமான துன்ப துயரங்களுக்கு ஆளாகிறார்கள். நாள் ஒன்றுக்கு சராசரி 10 முதல் 12 மணிநேரம் உழைக்கும் இவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்படுகிறார்கள். அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்படும் இவர்கள் உடற்சிதைவும், மூச்சு தொற்று திணறல், காசநோய், கண்பார்வை இழப்பு முதல் பல கொடிய நோய்களுக்கு பலியாகின்றனர். பட்டாசு-தீப்பெட்டித் தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் தீ மற்றும் வெடி விபத்துகளில் சிக்கிக் கொல்லப்படுவதையும் அடிக்கடி காண்கிறோம்.

இன்னும் முக்கியமாக கொத்தடிமைகளாகவும், அடகு வைக்கப்பட்டும், ஒப்பந்தக்காரர்களால் கடத்தப்பட்டு - விற்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள் நிலைமைதான் மிகமிக மோசமானது. இவர்களுக்கு வயிற்றுக்கு போதிய உணவும் கிடையாது; நாளொன்றுக்கு சில மணி நேரமே தூங்க அனுமதிக்கப்படுகிறார்கள். கொட்டடிகளில் அடைக்கப்படுவது மட்டுமல்ல, பெரு நகரங்களில் நிலவறைகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்த குழந்தைத் தொழிலாளர்கள் வேறு மாநிலங்களிலிருந்தும், இரயில் நிலையங்களிலிருந்தும் மீட்கப்படும் செய்திகள் அடிக்கடி வருகின்றன. குழந்தைத் தொழிலாளர் பெருமளவு உருவாவதற்கான சமூகப் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் வெறுமனே சட்டங்களும், திட்டங்களும் போடுவதையே சடங்குத்தனமாக ஆட்சியாளர்கள் செய்கின்றனர்.

''வேலைபார்க்கும் குழந்தைகள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர்களின் பிழைப்புக்கு மாற்று வழியை அளித்தாலொழிய சட்டங்கள் உதவாது'' என்கிறார், தேசிய பொதுமக்கள் ஒத்துழைப்பு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர் ஏ.கே.கோபால். தொழிற்சாலைகள் அல்லது வீடுகளிலிருந்து மீட்கப்படும் குழந்தைகள் அதன்பின் எங்கே போவார்கள்? என்று கேட்கிறார், குழந்தைத் தொழிலாளருக்கான அக்கறை மையத்தின் இயக்குநர் ஜோசப் காட்டியா.

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் சீர்திருத்தங்கள் காரணமாக ஏராளமான சிறுதொழில்கள் மற்றும் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன; விவசாயம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு விவசாயிகள், கூலி விவசாயிகள் வேலையிழந்து கூட்டம் கூட்டமாக இடம் பெயர்கிறார்கள். குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்து அவர்களிடத்தில் மேற்கண்ட காரணங்களால் வேலை இழப்போரைப் பொருத்தும் பார்வையோ - அக்கறையோ அரசிடம் கிடையாது; உழைப்புச் சந்தையே எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்படி விடப்படுகிறது. உழைப்புச் சந்தையில் மிகவும் மலிவானது குழந்தை உழைப்புத்தான் என்பதால் அவர்களின் தற்போதைய நிலை பராமரிக்கப்படுகிறது.

மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான உருப்படியான திட்டங்கள் எதுவும் அரசிடம் கிடையாது. தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் தொழிற்சங்கங்கள் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை தங்களுடையது அல்லவென்று தட்டிக் கழிக்கின்றன. குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை வறுமையினால் வருகிறது; அவர்களின் உரிமைகளுக்காகப் போராடுவது தங்கள் திட்டத்தில் இல்லை என்கின்றனர். ''பசியினால் சாகாமல் இருக்கத்தான் குழந்தைகள் வேலை செய்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்று அரசுக்குத் தெரியவில்லை'' என்கிறார் சி.ஐ.டி.யு. செயலாளர் தபன்சென்.

மீட்கப்படும் தொழிலாளர்கள், சிறார் சீர்திருத்தப்பள்ளி (குற்றத்தண்டனை பெற்ற சிறுவர்களை அடைக்கும் சிறைச்சாலை)யிலும், அரசுக் காப்பகங்களிலும் அடைக்கப்படுகின்றனர். மாதம் எட்டு ரூபாய் கூட அவர்களின் மறுவாழ்வுக்காக இந்திய அரசு ஒதுக்கவில்லை. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதும், அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதும் மாநில அரசுகளின் பொறுப்பாகும் என்று மையஅரசு தட்டிக் கழிக்கிறது. மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள் அரசு காப்பகங்களில் உள்ள கொடுமை தாளாமல் தப்பி ஓடி மீண்டும் கிடைக்கும் வேலைகளில் சேர்வதுதான் நடக்கிறது.

2007-ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி வழங்குவதைச் சாதிப்பதற்காக மைய அரசு அனைத்துக் குழந்தைக்கும் கல்வி (சர்வ சிக்சா அபிமன்) திட்டத்தை 2002-ஆம் ஆண்டு துவங்கியபோது, கட்டாயக் கல்வியும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கிறது என்று அரசு நிறுவனங்களும், ஆரம்பக் கல்வியாளர்களும் வலியுறுத்தினார்கள். ஆனால், பெரும்பாலான குழந்தைகள் தாமே விரும்பி தொழிலாளர்களாக மாறுவதோ, வேலையில் சேர்ந்து உழைப்பதோ கிடையாது; அவர்களுக்குக் கல்வியும், குழந்தைப் பருவ வாழ்க்கையும் மறுக்கப்பட்டும்தான் அந்த நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இந்த உண்மையை அங்கீகரிப்பதற்குப் பதில், ஏகாதிபத்திய நிதி உதவியையும் அரசு சாரா நிறுவனங்களையும் வைத்து அரைவேக்காட்டுத்தனமான சட்டங்கள் போட்டு, திட்டங்கள் தீட்டி குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கப் போவதாக நாடகமாடுகிறது, அரசு. சமூக, அரசியல் பொருளாதாரத்தை முழுக்கவும் சந்தைமயமாக்கி விட்டு, அதன் பாதிப்புகளில் இருந்து குழந்தைத் தொழிலாளர்களையும், ஆரம்பக் கல்வியையும் மட்டும் காப்பதாக நாடகமாடுகிறது அரசு. ஆகவே, மற்ற பிற மக்கள் உரிமை மற்றும் சமூக நீதிச் சட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் போலவே அரசின் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டங்களும் திட்டங்களும் வெறும் கண்துடைப்பு வேலைதான்!

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் இயங்கி வரும் ''சம வாய்ப்புக்கான மருத்துவர்கள் மன்றம்'' எனும் அமைப்பு, ''இட ஒதுக்கீடு பிரச்சினை மீண்டும் முன்னணிக்கு வந்ததில் இருந்தே, இக்கல்லூரியில் தீண்டாமை முன்னைவிடத் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுவதாக''க் குற்றஞ்சுமத்தியுள்ளது. சமீபத்தில் மட்டும் 23 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தீண்டாமை காரணமாக அறை மாறிவிட்டதாகவும்; விடுதி எண்: 1 பார்ப்பன அக்ரகாரமாகவும்; விடுதி எண் 4-ம், 5-ம், காலனியாக மாற்றப்பட்டு விட்டதாகவும்; இத் தீண்டாமை பற்றி புகார் கொடுக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், மேல்சாதிவெறி பிடித்த ஆசிரியர்களால் திட்டமிட்டே தோல்வியடையச் செய்யப்படுவதாகவும் இவ்வமைப்பு அம்பலப் படுத்தியுள்ளதோடு, இது பற்றிய புகாரை இந்திய அரசுத் தலைவருக்கும் அனுப்பியிருக்கிறது.



அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக இயக்குநர் வேணுகோபால்.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தி டெலிகிராப் ஆகிய ஆங்கில நாளேடுகளும் தில்லி மருத்துவ அறிவியல் கழகத்தின் விடுதியில், மேல்சாதி மாணவர்கள் கடைபிடிக்கும் தீண்டாமையை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆதாரங்களைப் பெற்று அம்பலப்படுத்தியுள்ளன. இதன் பின்னர், அக்கழகத்தின் நிர்வாக இயக்குநர்கள் குழு, இக்குற்றச்சாட்டுகள் பற்றி பதில் அளிக்குமாறு, அக்கழகத்தின் தலைமை இயக்குநர் வேணுகோபாலுக்கு நோட்டீசு அனுப்பியது. ஆனால், அச்சாதி வெறி பிடித்த பார்ப்பனரோ, அந்த நோட்டீசுக்கு இதுவரை பதில் அளிக்காமல் புறக்கணித்தே வருகிறார்.

பல்கலைக்கழக மானியக் குழுவும் தில்லி-மருத்துவ அறிவியல் கழகத்தில் நடந்து வரும் தீண்டாமைக் குற்றங்களை விசாரிக்க ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறது. இக்கமிட்டி, ''தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்களை அணுகி தீண்டாமை பற்றி புகார் கொடுக்கலாம்'' என்ற நோட்டீஸை மருத்துவக் கல்லூரியிலும் / விடுதியிலும் ஒட்டுமாறு கோரியதையும் வேணுகோபால் புறக்கணித்துவிட்டார். இத் தீண்டாமைக் கொடுமைகள் பற்றி, மைய அரசின் உயர் கல்வித்துறை செயலர் அறிக்கை அனுப்புமாறு போட்ட உத்தரவினையும் வேணுகோபால் குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டார்.

நியாயமாகப் பார்த்தால், ஆதிக்க சாதித் திமிரோடு நடந்து வரும் வேணுகோபாலை வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்க வேண்டும். ஆனால், அவரோ, தில்லி உயர்நீதி மன்ற நீதிபதிகளின் ஆதரவோடு பதவியில் ஒட்டிக் கொண்டு இருக்கிறார்.


இந்த இலட்சணத்தில், தில்லி மருத்துவ அறிவியல் கழகம் உள்ளிட்ட அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும், தங்களுக்கு மைய அரசிடமிருந்து அதிகப்படியான சுதந்திரம் வேண்டும் என்று கோர ஆரம்பித்துள்ளன. அவை கோரும் சுதந்திரம் அளிக்கப்பட்டால், நடைமுறையில் அதன் பொருள் என்னவாக இருக்கும் என்பதை நீங்களே அனுமானித்துக் கொள்ளுங்கள்!

● ரஹீம்

## வழக்குரைஞர் தோழர் திருப்பதிராயர் அவர்களுக்கு சிவப்பஞ்சலி!

கடந்த 21.10.06 அன்று அதிகாலை கூடலூரைச் சேர்ந்த வி.வி.மு. தோழர் திருப்பதிராயர், திடீர் மாரடைப்பால் மரணமடைந்து விட்டார்.

தன்னுடைய கல்லூரிக் காலத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளை ஏற்று ஊக்கமுடன் செயல்பட்ட தோழர் திருப்பதிராயர், திராவிட கழகத்தின் தீவிர ஆதரவாளராக இருந்தார். பின்னர், சமுதாய விடுதலையை தனது இலட்சியமாகக் கொண்டு, நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தின் தன்னை இணைத்துக் கொண்டு, 1980-களில் சி.பி.ஐ. (எம்.எல்) வினோத் மிஸ்ரா குழுவின் மதுரை நகரச் செயலராக இயங்கினார். அவ்வமைப்பின் புரட்டல்வாதப் பாதையை மறுதலித்து, 1993-இல் விவசாயிகள் விடுதலை முன்னணியில் இணைந்து, தனது இறுதி மூச்சு வரை உறுதியாகச் செயல்பட்டார்.



தோழர் திருப்பதிராயரின் வாழ்வையும் வி.வி.மு.வின் இயக்கத்தையும் பிரித்துப் பார்க்கவே முடியாது. அவர் வி.வி.மு.வின் பிரிக்க முடியாத அங்கமாக, முன்னோடியாக இயங்கினார். அமைப்பு தலையிடும் சிறிய விவகாரத்திலிருந்து பெரிய பிரச்சினைகள் வரை - போலீசு நிலையம், அதிகார வர்க்கம், நீதிமன்றம் வரை எங்குமே அவர் அமைப்பின் கொள்கையை, கௌரவத்தை இம்மியளவும் விட்டுக் கொடுத்ததில்லை. முன்னோடியாகச் செயல்பட்ட போதிலும், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைக் கையாள்வதில் தலைசிறந்தவர் என்று பலராலும் பாராட்டப்பட்ட போதிலும், தலைக்கனமோ இறுமாப்போ ஒருக்காலும் அவரை அண்டியதே இல்லை. மலைபோல் நின்று அமைப்பைப் பாதுகாத்து வளர்த்த 47 வயதான அத்தோழரின் திடீர் மரணம், ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தோழரின் மரணச் செய்தி அறிந்து, மதுரை, தேனி மாவட்டங்களிலிருந்து அமைப்புத் தோழர்களும், நண்பர்களும், உறவினர்களும் திரண்டு மரியாதை செலுத்தியதோடு, செங்கொடி போர்த்தி இறுதி ஊர்வலம் நடத்தி இடுகாட்டில் இரங்கல் கூட்டம் நடத்தினர். கண்ணீர் மல்க உரையாற்றிய அனைவரும் தோழரின் உயர்ந்த கம்யூனிசப் பண்புகளை வழுவாமல் பின்பற்றவும், அவரது புரட்சிகர கனவை நனவாக்கப் பாடுபடவும் உறுதியேற்று அஞ்சலி செலுத்தினர்.

தோழர் திருப்பதிராயரின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!

— விவசாயிகள் விடுதலை முன்னணி,
தேனி மாவட்டம்.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.
படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85 Regn. No: TN/CC(S)Dn/190/06-08 WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# சிறு பொறி பெருங்காட்டுத் தீ!



ஆலந்துறையில்...

கோவைக்கு அருகில் உள்ள ஆலந்துறை - இராமநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த ரங்கராஜ் என்ற விவசாயிக்குச் சொந்தமான நிலத்தில், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான மான்சாண்டோவின் இந்தியக் கூட்டாளியான மாஹிகோ நிறுவனம் சோதனைக்காகப் பயிரிட்டிருந்த மரபணு மாற்றம் செய்யப்பட்ட நெற்பயிரை, தமிழக வேளாண் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் நவ.10 அன்று வேரோடு பிடுங்கி அழித்து விட்டனர். இதற்காக, உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் செல்லமுத்து உள்ளிட்டுப் பலர் மீது தமிழக அரசு கிரிமினல் வழக்கு தொடுத்திருக்கிறது. இதனைப் போன்றே, அரியானா மாநிலத்தில் ராம்புரா கிராமத்திலும், உ.பி.யில் ருத்ரபுர் கிராமத்திலும் ''மாஹிகோ''வால் பயிரிடப்பட்டிருந்த மரபணு மாற்றம் செய்யப்பட்ட நெற்பயிரை, பல்வேறு விவசாய அமைப்புகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்து அழித்துள்ளனர்.

விவசாயிகள் தன்னெழுச்சியாக நடத்தியிருக்கும் இந்தப் போராட்டம் சிறுபொறிதான் என்றாலும், ஆளும் கும்பலின் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி விட்டது. ''இந்திய விவசாயிகளின் வறுமையைப் போக்கவும்; இந்தியாவில் நிகழும் பட்டினிச் சாவுகளைத் தடுக்கவும் விவசாயத்தில் உயிரி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை'' என அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டு, அவர்கள் இந்தக் கள சோதனையை நியாயப்படுத்தி வருகிறார்கள்.

பட்டினியைப் போக்க உயிரி தொழில்நுட்பம்தான் வழி என்றால், உலகமே இந்த விவசாய முறைக்கு மாறியிருக்க வேண்டும். ஆனால், உண்மையென்ன? சர்வதேசப் பல்லுயிர் பாதுகாப்புக் குழு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைச் சோதனை அளவில் கூடப் பயிரிடுவதற்குத் தடை விதித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில், இத்தொழில்நுட்பத்திற்கும், இதனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விவசாய பொருட்களின் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடைக்குக் காரணமே, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள், மனிதன், கால்நடைகள், தாவரங்கள், சுற்றுச்சூழல் ஆகிய இயற்கை சுழற்சியின் மீது கொடூரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுதான்.

ஆனாலும், ஏழை நாடான இந்தியா, இத்தொழில்நுட்பத்தைச் செயல்படுத்திப் பார்க்கும் சோதனைச்சாலை எலியாக மாற்றப்பட்டு விட்டது. முதலில் மான்சாண்டோவின் பி.டி. பருத்தி விதை வந்தது; அதன்பின் பி.டி. ஆமணக்கு, பி.டி. கத்தரிக்காய்; இப்பொழுதோ இந்திய விவசாயத்தின் உயிர் நாடியான நெல் விளைச்சலுக்கே ஆபத்தாக பி.டி. நெல் வந்துவிட்டது.



ராம்புராவில்...

பி.டி. பருத்தி விதைகள் ஆந்திர பருத்தி விவசாயிகளைப் போண்டியாக்கி, தற்கொலைக்குத் தள்ளிவிட்ட பிறகும் இந்தக் கொலைகார தொழில்நுட்பத்தை முற்றிலுமாகத் தடை செய்ய இந்திய அரசு மறுத்து வருகிறது. இதற்குக் காரணம் உ.வ.க.வின் உத்தரவு. ''உலக வர்த்தக நிறுவன அங்கீகாரத்தோடுதான் இங்கே அந்த நெல்லை விற்பனை பண்ண வந்திருக்காங்க. அதனால தடை பண்றதெல்லாம் சாதாரண விசயமல்ல'' எனத் தமிழக வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பச்சையாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதைத்தான் இரண்டாவது பசுமைப் புரட்சி என்று மன்மோகன் சிங் கும்பல் கொண்டாடுகிறது. ஏற்கெனவே, உரத்திற்கும், பூச்சி மருந்திற்கும் பன்னாட்டு நிறுவனங்களை அண்டி நிற்கும் இந்திய விவசாயிகளை, விதைகளுக்காகவும் கையேந்த வைத்து, இந்திய விவசாயத்தின் சுயசார்புத் தன்மையை முற்றாக அழித்துவிட வேண்டும் என்பதுதான் இரண்டாவது பசுமைப் புரட்சியின் பின்னுள்ள சதித் திட்டம்.

இந்திய விவசாயி விதை நெல்லுக்காக மான்சாண்டோவிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டால், இந்திய மக்கள் உணவுக்காக அமெரிக்காவிடம் கையேந்தும் நிலை உருவாகிவிடும். இந்த அடிமைத்தனத்திற்குள் நாடு சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளுக்கு எதிராக விவசாய அமைப்புகள் கலகத்தில் இறங்கியுள்ளன. மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிரான இந்தப் போரில் நீங்கள் எந்தப் பக்கம்?